# உயில்

## (அல் வஸிய்யத்)

உருது மூலம் :

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது**

வாக்களிக்கப்பட்ட மஹ்தி, மஸீஹ்
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நிறுவுனர்

தமிழாக்கம் :

**மவ்லவி M. ரஃபீக் அஹ்மத் H.A.**

*வெளியிடுவோர் :*

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**
**11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,**
**கோடம்பாக்கம், சென்னை - 600 024**

Copy rights Reserved

***'Ouyil'***

Tamil Version of ***AL WASIYYAT*** (Urdu)
*by* □□□□□□ □□□□□ □□□□□□ □□□□□

First Edition **2007**

Translated by
**Maulavi M. Rafeeq Ahmad H.A.**

Published by :
**AHMADIYYA MUSILM JAMA'ATH**
No. 11, First Main Road,
United India Colony, Kodambakkam,
Chennai - 600 024, Tamil Nadu

# அறிமுகம்

'அல்வஸிய்யத்' - உயில் என்ற இந்த நூல் 1905 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எழுதப்பட்டதாகும். இந்நூலில் வாக்களிக்கப்பட்ட மஸீஹுௗம் மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் தமது மரணம் அண்மையில் நிகழப்போகின்றது என்பதை வெளிப்படுத்துகின்ற எல்லா இறை அறிவிப்புகளையும் எழுதியிருக்கின்றார்கள். நபியின் மரணத்தினால் அவரது சமுதாயத்திற்கு ஏற்படுகின்ற அதிர்ச்சி தொடர்பாக ஜமாஅத்திற்கு ஆறுதல் கூறியவாறு இரு விதமான வல்லமைகளைக் காட்டுவது தொன்று தொட்டே இருந்து வரும் அல்லாஹ்வின் நடைமுறையாகும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

1) முதலாவது வல்லமை நபியின் தோற்றமாகும். 2) மேலும் நபியின் மரணத்திற்கு பிறகு இரண்டாவது வல்லமை வெளிப்படும். உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களது மரணத்திற்குப் பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் அபுபக்கர் (ரலி) அவர்களை நிறுத்தினான். அவர்கள் இஸ்லாத்தை அழிவில் இருந்து காப்பாற்றினார்கள். ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது மரணத்தைப் பற்றிய செய்தியை தெரிவித்த அதே சமயத்தில் அத்துடன் கிலா:பத்தின் ஒரு நிரந்தரத் தொடர் தமது ஜமாஅத்தில் தொடர்ந்து நீடிக்கும் என்ற நற்செய்தியையும் தெரிவித்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபுபக்கர் (ரலி) அவர்களை உதாரணமாக எடுத்துக்கூறிய பிறகு மிகவும் தெளிவான சொற்களில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

"நான் போகாதவரை அந்த இரண்டாவது வல்லமை உங்களிடம் வராது. ஆனால், நான் சென்ற பிறகு அந்த இரண்டாவது வல்லமையை இறைவன் உங்களுக்காக அனுப்பி வைப்பான். அது எப்போதும் உங்களுடன் இருக்கும்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் நாட்டத்திற்கு ஏற்ப இஸ்லாத்தைப் பரப்புதல், திருக்குர்ஆனின் கட்டளைகளை பிறருக்கு எட்ட வைத்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நாளுக்குநாள் வளர்ச்சி அடையும் ஒரு நிரந்தர அமைப்பை நிறுவுவது பற்றிய அறிவிப்பை இந்நூலில் வெளியிட்டார்கள். அது 'அல் வஸிய்யத் அமைப்பு' என்ற பெயரால் பிரசித்தி பெற்ற அமைப்பாகும். மேலும் அதுவே வருங்காலத்தில் உலகத்தில் உருவாகும் பல்வேறு பொருளாதார அமைப்புகளுக்கு "புது உலகத் திட்டம்" ஆக நிரூபணமாகும். இத்திட்டத்தின் அடிப்படையில், இஸ்லாத்தைப் பரப்புவதற்காக வஸிய்யத் செய்கின்ற ஒவ்வொருவரும் தனது வருமானத்திலிருந்தும், தனது சொத்திலிருந்தும் பத்தில் ஒரு பங்கை ஜமாஅத்திற்கு வழங்க வேண்டும்.

வஸிய்யத் செய்பவர் இறையச்சம் உடையவராகவும் அல்லாஹ் விலக்கியவற்றிலிருந்து விலகுபவராகவும், இறைவனுக்கு இணை வைப்பதிலிருந்தும் மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுபவற்றிலிருந்து விலகுபவராகவும், உண்மையாளராகவும், தூய்மையாளராகவும் இருக்க வேண்டும் என்பதும் நிபந்தனையாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் நாட்டத்திற்கேற்ப அவ்வாறு வஸிய்யத் செய்தவர்களுக்காக (அவர்களது மரணத்திற்குப் பிறகு அடக்கம் செய்யப்படுவதற்கென்று) ஒரு கல்லறையை ஏற்படுத்தினார்கள். மேலும் அவர்கள் இக்கல்லறை தொடர்பாக இவ்வாறு துஆ செய்துள்ளார்கள்.

"இறைவன் இதில் அருள்புரிவானாக! இதனை சொர்க்கத்திற்குரியவர்களின் கல்லறையாக ஆக்குவானாக! உண்மையிலேயே உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி உலகின் நேசத்தை விட்டுவிட்டு தங்களை இறைவனுக்காக ஆக்கிக் கொண்டு தங்களிடத்தில் தூய்மையான மாறுதலை உருவாக்கி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபிகள் போன்று நேர்மை, உண்மை ஆகியவற்றின் முன்மாதிரியைக் காட்டிய இந்த ஜமாஅத்தைச் சேர்ந்த தூய உள்ளம் கொண்ட மக்கள் இறுதியாக உறங்குமிடமாக அது இருக்கட்டும் என்று இறைவனிடம் நான் துஆ செய்கின்றேன். ஆமீன் யாரப்பல் ஆலமீன்."

'அல் வஸிய்யத்' நூலுடன் ஓர் இணைப்பும் உள்ளது. அதில் வஸிய்யத் செய்வது தொடர்பாகவும் பெஹஷ்தி மக்பராவில் அடக்கம் செய்யப்படுவது தொடர்பாகவும் விரிவான விதிமுறைகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் எழுதப்பட்டுள்ளன.

மேலும் இந்நூலின் இறுதியில், 1906 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதி நடைபெற்ற வஸிய்யத் அமைப்பு தொடர்பான கூட்ட நிகழ்வுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

(வெளியீட்டாளர்)

# அல்லாஹ்வின் வஹீ

*"உலகில் ஓர் எச்சரிப்பாளர் வந்தார். ஆனால்,*
*உலகமோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.*
*ஆனால், இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான்.*
*மேலும் வலுவான தாக்குதல்களால் அவரது*
*உண்மையை வெளிப்படுத்துவான்."*

"அல் வஸிய்யத்" என்னும் பெயரைக் கொண்ட இந்நூல் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) காதியானி அவர்களால் எழுதப்பட்டது. மேலும் அன்னாரின் கட்டளையினால் சவுத்ரி அல்ஹாத் மெகஸின் அச்சகத்தில் 24 டிசம்பர் 1905-ல் அச்சடிக்கப்பட்டது.

بسم الله الرحمن الرحيم

الحمدُ للهِ ربِّ العالمين والصّلوةُ والسّلامُ على رسولِهِ مُحمد
وآلِهِ وأصحابِهِ أجمعين

எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லா புகழும் உரியது. அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார் மீதும், அவர்களின் அனைத்து தோழர்கள் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.

வல்லமையுள்ள இறைவன் எனக்கு தொடர்ச்சியாக அருளிய இறையறிவிப்புகளில் எனது மரணத்தின் நேரம் நெருங்கி விட்டதாக கூறினான். இது தொடர்பாக அவனிடமிருந்து எந்த அளவு தொடர்ச்சியாக இறையறிவிப்புகள் வந்தனவென்றால் அவை எனது இருப்பின் அடித்தளத்தையே அசைத்து விட்டன. மேலும், அவை இவ்வுலக வாழ்வை விட்டும் என் உள்ளத்தை திருப்பிவிட்டதால் நான் எனது நண்பர்களுக்கும், எனது சொற்களிலிருந்து பயன் பெற விரும்பும் அனைத்து மக்களுக்கும் சில அறிவுரைகளை எழுதுவது பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

எனவே, எனக்கு எனது மரணத்தை பற்றி தெரிவித்து என்னிடம் இவ்விஷயங்களை எழுதத் தூண்டிய அந்த தூய இறையறிவிப்பு பற்றி முதலில் உங்களுக்கு தெரிவிக்கின்றேன்.

அரபி மொழியில் வந்த வஹீ இதுவாகும். இதனை எழுதிய பிறகு உருதுவில் வந்த வஹீயும் எழுதப்படும்.

قَرُبَ أجلُكَ المُقَدَّر، وَلاَ نُبقِي لَكَ من المُخزيات ذِكرًا. قَلَّ مِيعَادُ رَبِّكَ وَلاَ نُبقِي لَكَ من المُخزِيَاتِ شيئًا. وَإمّا نُرِيَنَّكَ بعضَ الّذى نَعِدُهُم أو نَتوفَّيَنَّكَ. تَمُوتُ وَأنَا رَاضٍ منكَ. جاءَ وَقتُكَ وَنُبقِى لَكَ الآياتِ بيِّناتٍ. قَرُبَ ما تُوعَدُونَ. وَأمّا بِنِعمَةِ رَبِّكَ فَحدِّث. إنّه من يَتّقِ اللهَ وَيَصبِر فَانَّ اللهَ لا يُضِيعُ أجرَ المُحسِنِين.





பொருள் : உமக்கு விதிக்கப்பட்ட முடிவு நேரம் அருகில் வந்து விட்டது. உமது இழிவிற்கு காரணமாக இருக்கும் எந்த ஒரு விஷயங்களின் பெயரையும் அடையாளத்தையும் நாம் விட்டுவைக்க மாட்டோம். உமக்கு இறைவன் நிர்ணயித்துள்ள கால அவகாசம் குறைவாகவே எஞ்சியுள்ளது. உம்மை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு கூறப்படும் அனைத்து ஆட்சேபணைகளையும் நாம் அகற்றி விடுவோம். அவற்றில் எதையும் எஞ்சியிருக்க விடமாட்டோம்.

எதிரிகள் தொடர்பான நமது முன்னறிவிப்புகளில் சிலவற்றை நாம் உமக்குக் காட்டவோ அல்லது உமக்கு மரணத்தை தரவோ நாம் ஆற்றல் பெற்றுள்ளோம். நான் உம்மிடம் முழுமையாக திருப்தியடைந்திருக்கும் நிலையில் நீர் மரணிப்பீர். உமது நேரம் வந்துவிட்டது. உம்மை உண்மைபடுத்துவதற்கான மிகத் தெளிவான அடையாளங்களை நாம் எப்போதும் வைத்திருப்போம். உமக்கு வாக்களிக்கப்பட்டது அருகில் இருக்கின்றது. உமக்கு வழங்கப்பட்ட உமது இறைவனின் அருள்களை மக்களிடத்தில் எடுத்துக்கூறும். எவர் இறையச்சத்தை மேற்கொண்டு பொறுமையுடன் இருப்பாரோ அப்படிப்பட்ட நல்லவர்களது கூலியை இறைவன் வீணாக்கமாட்டான்.

உமக்கு கண்ணியக்குறைவையும் இழிவையும் ஏற்படுத்தக் காரணமாக இருக்கும் விஷயங்களை நாம் எஞ்சியிருக்க விடமாட்டோம் என்ற இறைவனின் இந்த கூற்று இரு கருத்துக்களை கொண்டது என்பதை இவ்விடத்தில் நினைவிற்கொள்ள வேண்டும்.

முதலாவதாக, (உம்மை) இழிவுபடுத்தும் எண்ணத்தில் வெளியிடப்படும் ஆட்சேபணைகளை நாம் அகற்றிவிடுவோம். மேலும், அந்த ஆட்சேபணைகளின் பெயரும் அடையாளமும் எஞ்சியிருக்காது என்று இறைவன் கூறியுள்ளான்.

இரண்டாவதாக, தமது தீய செயல்களை கைவிடாமல் தீய பேச்சுக்களை விட்டு விலகாமல் என்னை குறித்து இப்படிப்பட்ட அவதூறுகளை கூறுபவர்களை நாம் இவ்வுலகிலிருந்து எடுத்து விடுவோம். இப்பூமியில் அவர்களை இல்லாமல் ஆக்கி விடுவோம்.

அவ்வாறு அவர்கள் அழிந்ததன் காரணமாக அவர்களது முட்டாள் தனமான ஆட்சேபணைகளும் அழிந்துவிடும்.

***இதற்குப் பிறகு இறைவன் எனது மரணம் தொடர்பாக உருது மொழியில் கீழ்காணும் சொற்களில் என்னை நோக்கி இவ்வாறு கூறினான்:***

“மிகவும் சொற்ப நாட்களே எஞ்சியுள்ளன. அந்நாளில் எல்லாரின் மீதும் துக்கம் சூழ்ந்து கொள்ளும். இது நிகழும்; இது நிகழும்; இது நிகழும்; இதற்கு பிறகு உமது சம்பவம் நிகழும். எல்லாவித சேதங்களும் இயற்கையின் ஆச்சரியங்களும் காட்டப்பட்டபின் உமது மரணம் நிகழும். கடும் சேதங்கள் தொடர்பாக எனக்கு வழங்கப்பட்டுள்ள ஞானம் இதுதான். அதாவது, உலகின் ஒவ்வொரு திசையிலும் மரணம் தனது வலையை விரித்துவிடும். பூகம்பங்கள் நிகழும். அவை கடுமையாகவும் மறுமையின் முன்மாதிரியாகவும் இருக்கும். மேலும், அவை பூமியை தலைகீழாக புரட்டிவிடும். பலரது வாழ்வு கசப்பானதாகி விடும். பிறகு எவர் பாவமன்னிப்புத்தேடி பாவங்களிலிருந்து விலகிவிடுவாரோ அவர் மீது இறைவன் கருணை காட்டுவான். இக்காலகட்டத்தைப் பற்றி எல்லா நபிமார்களும் முன்னறிவித்துள்ளது போன்று இவை அனைத்தும் நிகழவேண்டியது அவசியமானதாகும். ஆனால் எவர்கள் தமது உள்ளத்தை சீர்திருத்திக் கொள்வார்களோ, மேலும் இறைவனுக்குப் பிரியமான வழிகளில் நடப்பார்களோ அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் துயரப்படவுமாட்டார்கள்.”

***இறைவன் என்னை நோக்கி இவ்வாறு கூறினான்:***

“நீர் என்னால் அனுப்பப்பட்ட ஓர் எச்சரிப்பாளர் ஆவீர். குற்றவாளிகளை நல்லவர்களிலிருந்து பிரித்துவிடுவதற்காக நான் உம்மை அனுப்பியுள்ளேன்.”

***மேலும் அவன் கூறினான்:***

“உலகிற்கு ஓர் எச்சரிப்பாளர் வந்தார். உலகமோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனால், இறைவன் அவரை ஏற்றுக்





கொள்வான். மேலும், வல்லமைமிக்க தாக்குதல்களால் அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.[1] நான் எந்த அளவுக்கு அருள்களை வழங்குவேன் என்றால் அரசர்கள் உமது ஆடையில் இருந்து அருள்களை தேடுவார்கள்.”

மேலும், எதிர்காலத்தில் நிகழவிருக்கும் கடுமையான ஒரு பூகம்பம் தொடர்பாகவும் எனக்கு அல்லாஹ் அறிவித்துள்ளான். மேலும் அவன் கூறினான்:

“மீண்டும் வசந்த காலம் வந்தது; இறைவனது வார்த்தை மீண்டும் நிறைவேறியது.”

எனவே, ஒரு கடுமையான பூகம்பம் வரவேண்டியது கண்டிப்பானதாகும். ஆனால், நேர்வழியில் இருப்பவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். எனவே, நேர்வழியில் இருப்பவர்களாக ஆகுங்கள். மேலும், இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். அதனால் நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள். அந்நாளில் ஏற்படும் அச்சத்திலிருந்து பாதுகாப்பு பெற இன்று இறைவனுக்கு அஞ்சுங்கள். வானம் சில அடையாளங்களை காட்ட வேண்டியதும் பூமி சிலவற்றை வெளிப்படுத்த வேண்டியதும் கட்டாயமானதாகும். ஆனால், இறைவனுக்கு அஞ்சுபவர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

பெரும் துன்பங்கள் வருமென்றும் பல ஆபத்துகள் பூமியில் இறங்குமென்றும் அவற்றில் சில என் வாழ்நாளிலும் மற்றும் சில எனது மறைவுக்கு பிறகும் வெளிப்படுமென்றும் அவன் இந்த இயக்கத்திற்கு முழுமையான முன்னேற்றத்தை வழங்குவானென்றும் அவற்றில் சில எனது கரங்களாலும் மற்றும் சில நான் மறைந்த

*1 உலகின் கண்கள் திறந்திருக்குமென்றால் நான் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றியிருப்பதையும் இது வரை ஏறக்குறைய பதினான்காம் நூற்றாண்டின் கால்பகுதி கழிந்திருப்பதையும் அது கண்டுகொள்ளும். நபிமொழிகளில் முன்னறிவித்திருந்ததற்கிணங்க நான் வாதம் செய்த சமயத்தில் ரமலான் மாதத்தில் சந்திர கிரகணமும், சூரிய கிரகணமும் நிகழ்ந்தது; பிளேக் நோயும் நாட்டில் பரவியது; பூகம்பங்களும் நிகழ்ந்தன. அவை இன்னும் நிகழவுமிருக்கின்றன. எவர்கள் இவ்வுலகை நேசித்து என்னை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றார்களோ அவர்கள் மீது பரிதாபமே.*

பிறகும் நிறைவேறும் என்றும் இறையறிவிப்புகள் எனக்குத் தெரிவிக்கின்றன.

இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்கே எப்போகும் இங்க நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான். كتب الله لأغلبن أنا ورسلي "நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம்" (58:22) என அல்லாஹ் எழுதி வைத்துள்ளான் என்று அவன் கூறியதற்கிணங்க அவன் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் உதவி செய்கின்றான்; அவர்களுக்கு வெற்றியை வழங்குகின்றான். இங்கு வெற்றி என்பதன் கருத்து, எவ்வாறு நபிமார்களும் தூதர்களும் விரும்பினார்களோ அவ்வாறே இறைவனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமலாக வேண்டும் என்பதும் ஆகும். எனவே இறைவன் வல்லமைமிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகின்றான். மேலும், எந்த நேர்வழியை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகின்றார்களோ அதற்கான விதையை அவர்களது கைகளாலேயே அவன் விதைத்து விடுகின்றான். ஆனால், அவர்களது கைகளால் அதனை முழுமையாக நிறைவு செய்ய அவன் வைப்பதில்லை. மாறாக, வெளிப்படையில் தோல்வி என்னும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்து, எதிரிகளுக்கு எள்ளி நகையாடவும் பழிச்சொற்களையும் அவதூறு களையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடுகிறான். அவர்கள் எள்ளி நகையாடி, பரிகாசம் செய்த பிறகு, மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கையை காட்டுகின்றான். அதன் மூலம் ஓரளவுக்கு முழுமை பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் அதன் முழுமையான நிறைவை எட்டிவிடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறான்.

சுருக்கமாக, இறைவன் இரு விதமான வல்லமையை வெளிப்படுத்துகின்றான்.





முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தை காட்டுகின்றான்.

இரண்டாவதாக, ஒரு நபி மரணிக்கின்ற சமயத்தில் அந்த நபியின் மரணத்திற்கு பின்னர் (அவரை பின்பற்றுபவர்கள்) துன்பங்களை எதிரிடும் நிலை உருவாகின்றது. எதிரிகள் வலுப்பெற்று இப்போது பணி சீர்குலைந்து விட்டது என கருதுகின்றனர். இந்த ஜமாஅத் இனி அழிந்துவிடும் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத்திலுள்ள மக்களும் சந்தேகத்தில் வீழ்ந்து விடுகின்றனர். அவர்களது இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பாக்கியமிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விலகும் வழிகளை மேற்கொண்டு விடுகின்றனர். அப்போது இறைவன் இரண்டாம் முறையாக தனது மகத்தான வல்லமையை வெளிப்படுத்துகிறான். மேலும் வீழ்ந்து கிடக்கும் ஜமாஅத்தை காப்பாற்றி விடுகிறான்.

எனவே, கடைசிவரை பொறுமையுடன் இருப்பவர் இறைவனின் இந்த அற்புதத்தை காண்கிறார். ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறே நடந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஒரு அகால மரணமாக கருதப்பட்டது. காட்டுவாசிகளான பல அறிவிலிகள் மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். நபித்தோழர்கள் கூட துக்கத்தின் காரணமாக பைத்தியக்காரர்களைப் போன்று ஆகி விட்டார்கள். அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களை நியமித்து மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியைக் காட்டினான். இஸ்லாம் அழிந்து கொண்டிருக்கும் வேளையிலேயே அதனை காப்பாற்றி விட்டான்.

وليمكنن لهم دينهم الذى ارتضى لهم وليبدلنهم من بعد خوفهم امنا

"அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தில் அவர்களை உறுதியாக நிலைநிற்கச் செய்வான். அவர்களது அச்சத்தின் நிலையை மாற்றி அதற்கு பிறகு அமைதியினை வழங்குவான்." (24:56) என அவர்களிடம் செய்த

அந்த வாக்குறுதியை நிறைவேற்றினான். அதாவது அச்சத்திற்கு பிறகு அவர்களது பாதங்களை உறுதிப்படுத்துவதாக அவன் வாக்குறுதியளித்திருந்தான்.

அவ்வாறே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய காலத்திலும் நடந்தது. அவர்கள் இஸ்ரவேல் சந்ததிகளை அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கேற்ப அவர்களை கொண்டு சேர்க்க வேண்டிய இலக்கை அடைவதற்கு முன்பே எகிப்திற்கும் கன்ஆன் தேசத்திற்கும் இடைப்பட்ட வழியில் சென்று கொண்டிருக்கையில் மரணமடைந்து விட்டார்கள். இஸ்ரவேல் மக்களுக்கு அவருடைய மரணத்தினால் பெரும் துக்கம் ஏற்பட்டது. தவ்ராத்தில் எழுதப்பட்டிருப்பது போல் இஸ்ரவேல் மக்கள் இந்த அகால மரணத்தின் துக்கத்தினாலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களது திடீர் பிரிவின் துயரத்தினாலும் நாற்பது நாட்கள் வரை அழுதுகொண்டிருந்தனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடனும் இப்படித்தான் நடந்தது.

சிலுவை சம்பவம் நடைபெற்ற போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது எல்லா சீடர்களும் இங்குமங்குமாக சிதறி ஓடிவிட்டனர். அவர்களில் ஒருவர் மறுதலித்து விட்டார்.

எனவே அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகிறான். எனவே, இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டுவிடுவது சாத்திய மில்லை. எனவே, நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனெனில் அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும், அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில், அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த





இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் (குறிப்பிடப்பட்டு) உள்ளது. மேலும் அவ்வாக்குறுதி என்னைப் பற்றி அல்ல; மாறாக, உங்களைப் பற்றியதாகும். நான் உம்மை பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே, என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வரவேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மை யானவனும் நன்றியுள்ளவனும் உண்மையாளனுமாவான். அவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்களாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனாலும் இறைவன் தெரிவித்திருக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும்வரை இந்த உலகம் நிலைபெற்றிருக்கும்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்கு பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்று கூடி துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமைமிக்க இறைவன் என்பதை உங்களுக்கு காட்டட்டும். உங்கள் மரணத்தை அருகில் இருப்பதாகக் கருதுங்கள். அந்த நேரம் எப்போது வரும் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.

தூய மனதை கொண்ட ஜமாஅத்தின் சான்றோர்கள் என் பெயரில் எனக்கு பிறகு மக்களிடமிருந்து பைஅத் வாங்கட்டும்.[2] ஆசியா, ஐரோப்பா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும் பூமியிலுள்ள பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்ற எல்லா நல்ல ஆன்மாக்களையும் எல்லா நல்ல இயல்பு கொண்டவர் களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து, தனது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கவே இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனுடைய நோக்கமாகும். அதை நிறைவேற்றுவதற்காகவே நான் உலகத்தில் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் மென்மை நல்லொழுக்கம், துஆக்கள் ஆகியவற்றில் அழுத்தம் கொடுத்து இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள். எனக்கு பிறகு யாராவது இறைவனிட மிருந்து பரிசுத்த ஆவியை பெற்று நிற்காதவரை நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்றுங்கள்.

நீங்களும் இரக்கத்தன்மை, தமது ஆத்மாக்களை தூய்மை செய்தல் ஆகியவற்றின் மூலம் பரிசுத்த ஆவியின் பங்கினைப் பெறவேண்டும். ஏனெனில் பரிசுத்த ஆவியின்றி உண்மையான

*2 இப்படிப்பட்டவர்களை தேர்ந்தேடுப்பது நம்பிக்கையாளர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் அமையும். எந்த நபர் தொடர்பாக அவர் எனது பெயரால் மக்களிடமிருந்து பைஅத் வாங்க தகுதியுடையவர் என்பதில் நாற்பது நம்பிக்கையாளர்களுக்கு ஒருமித்த கருத்து இருக்குமோ அவருக்கு பைஅத் வாங்க அனுமதியுண்டு. அவர் தன்னை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். உமது ஜமாஅத்திற்காக உமது சந்ததியிலிருந்தே ஒரு நபரை நான் எழுப்புவேன். அவருக்கு எனது நெருக்கத்தின் மூலமாகவும் வஹியின் மூலமாகவும் சிறப்பை வழங்குவேன். அவர் மூலமாக உண்மை முன்னேற்றமடையும் பல மக்களும் உண்மையை ஏற்றுக்கொள்வர் என்று இறைவன் எனக்கு தெரிவித்துள்ளான். எனவே, அந்த நாட்களுக்காக காத்திருங்கள். ஒவ்வொருவரும் அவருக்குரிய நேரத்தில்தான் இனங்கண்டு கொள்ளப்படு கின்றார். அந்த நேரத்திற்கு முன்னர் அவர் ஒரு சாதாரண மனிதராக தென்படுவது சாத்தியம்தான் அல்லது சில ஏமாற்றுகின்ற எண்ணங்கள் காரணமாக அவர் ஆட்சேபணைக்குரியவராகவும் இருக்கலாம். எவ்வாறு முழுமையான மனிதனாக மாறவிருக்கும் ஒருவர் கூட அவன் பிறக்கும் முன்னே தாயின் கருப்பையில் ஒரு விந்துத் துளியாக அல்லது இரத்தக் கட்டியாக இருக்கின்றானே (அது போன்றே இறைவன் புறமிருந்து வருபவர்களின் தோற்றமும் இருக்கின்றது).*





இறையச்சத்தைப் பெற முடியாது. மனஇச்சைகளை முற்றிலும் விட்டுவிட்டு இறைவிருப்பத்தைப் பெறும்பொருட்டு எல்லா வழிகளையும் விட ஒடுங்கிய வழியினை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உலக இன்பங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அவை இறைவனிடமிருந்து விலக்கி விடுகின்றன. இறைவனுக்காக கசப்பான வாழ்வை மேற்கொள்ளுங்கள். இறைவிருப்பத்தை பெற்றுத்தரக்கூடிய துன்பம் அவனை கோபமூட்டக்கூடிய இன்பத்தை விட சிறந்தது. இறை கோபத்திற்கு காரணமாக அமையும் வெற்றியைவிட இறைதிருப்தியை பெறக்கூடிய தோல்வியே சிறந்தது. இறைவனுடைய கோபத்திற்கு அருகில் கொண்டு செல்லும் அன்பை விட்டு விடுங்கள். நீங்கள் தூய உள்ளத்துடன் அவன் பக்கம் வருவீர்களென்றால் ஒவ்வொரு வழியிலும் அவன் உங்களுக்கு உதவி செய்வான். எந்த எதிரியாலும் உங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்த முடியாது.

நீங்கள் உங்கள் விருப்பத்தையும், இன்பங்களையும், கண்ணியத்தையும், செல்வத்தையும், உயிரையும் துறந்து, மரணத்தின் காட்சியை உங்கள் முன்னால் கொண்டு வருகின்ற அந்தக் கசப்புகளைத் தாங்கி கொள்ளாமல் எந்நிலையிலும் நீங்கள் இறைதிருப்தியை பெற முடியாது. ஆனால், நீங்கள் இந்தக் கசப்புகளை சகித்துக் கொண்டால் ஒரு அன்பான குழந்தையை போன்று இறைவனின் மடியில் அமர்ந்து கொள்வீர்கள். உங்களுக்கு முன்னர் சென்று போன நேர்மையான நல்லடியார்களின் வாரிசாக்கப்படுவீர்கள். மேலும் ஒவ்வோர் அருளின் கதவுகளும் உங்களுக்காகத் திறக்கப்படும். அந்தோ! அப்படிப்பட்டவர்கள் குறைவாகவே உள்ளனர்.

இறையச்சம் என்பது உள்ளத்தில் நடப்படவேண்டிய ஒரு மரம் என இறைவன் என்னிடம் கூறினான். எந்த தண்ணீரால் இறையச்சம் வளர்ச்சியடைகிறதோ அதுவே (வாழ்க்கை என்னும்) தோட்டம் முழுவதையும் செழிப்பாக வைத்திருக்கும். இறையச்சம் எத்தகைய ஆணிவேர் என்றால் அது இல்லையெனில் எல்லாமே வீண். அது எஞ்சியிருந்தால் எல்லாமே எஞ்சியிருக்கும். உண்மையில் உறுதியுடன் நிலைத்து நிற்காமல் இறைவனை பெறுவதற்காக

நாவளவில் வாதிக்கும் மனிதனின் வீண் செயலால் அவனுக்கு என்ன பலன் ஏற்படும்?

தனது உள்ளத்தில் மார்க்கத்துடன் சிறிது உலக நேசத்தையும் கலக்கின்ற மனிதன் அழிந்துவிட்டான் என்பதை உண்மையாகவே உங்களுக்கு கூறுகின்றேன். மேலும் தனது எல்லா நோக்கங்களும் அல்லாஹ்வுக்காக அல்லாமல் சிலவற்றை இறைவனுக்காகவும் சிலவற்றை உலகிற்காகவும் வைத்திருக்கும் ஆன்மா நரகத்திற்கு மிக அருகில் உள்ளது. உங்களது நோக்கங்களில் உலக ஆசை அணுவளவு கலந்து விட்டாலும் கூட உங்களது எல்லா வணக்கங்களும் வீணாகிவிடும். இந்நிலையில் நீங்கள் இறைவனை பின்பற்றவில்லை. ஷெய்த்தானைத்தான் பின் தொடர்ந்து செல்கின்றீர்கள். இந்நிலையில் இறைவன் உங்களுக்கு உதவி செய்வான் என்று ஒருபோதும் எதிர்பார்க்க வேண்டாம். மாறாக, இந்த நிலையில் நீங்கள் பூமியின் புழுக்களாக இருக்கின்றீர்கள். மேலும் சில நாட்களில் புழுக்கள் அழிவது போன்று நீங்களும் அழிந்து விடுவீர்கள். உங்களிடம் இறைவன் இருக்க மாட்டான். மாறாக, உங்களை அழித்து விட்டு இறைவன் மகிழ்ச்சியடைவான். நீங்கள் உண்மையிலேயே அவனுக்காக மரணித்துவிட்டால் அந்நிலையில் நீங்கள் இறைவனிடம் வெளிப்படுவீர்கள். மேலும் இறைவன் உங்களுடன் இருப்பான். நீங்கள் வாழும் வீடு அருளுக்குரியதாக இருக்கும். உங்களது வீட்டு சுவர்களின் மீது இறைவனின் கருணை இறங்கும். அப்படிப்பட்ட மனிதன் வாழ்கின்ற நகரம் அருளுக்குரியதாக இருக்கும்.

உங்களது வாழ்வும் மரணமும், உங்களது ஒவ்வொரு அசைவும் உங்களது மென்மையும் கடுமையும் இறைவனுக்காக மட்டும் இருந்தால், மேலும் ஒவ்வொரு கசப்பான நேரத்திலும் துன்ப வேளையிலும் நீங்கள் இறைவனை சோதித்து பார்க்காமலும் அவனுடனுள்ள உறவை துண்டித்துக் கொள்ளாமலும் உங்கள் பாதங்களை முன்னோக்கி வைத்தால் நீங்கள் இறைவனின் ஒரு சிறப்பான சமுதாயமாக ஆகிவிடுவீர்கள் என நான் உண்மையாகவே





கூறுகின்றேன். நான் மனிதனாக இருப்பது போன்று நீங்களும் மனிதர்களாக இருக்கின்றீர்கள். என்னுடைய இறைவனே உங்களுடைய இறைவனாக இருக்கின்றான். எனவே, உங்களுடைய தூய ஆற்றல்களை வீணாக்கி விடாதீர்கள். நீங்கள் முழுமையாக இறைவன் பக்கம் குனிந்தால் நீங்கள் இறைவனின் குறிப்பான அருளைப் பெற்ற சமுதாயமாக ஆகிவிடுவீர்கள் என்பதை இறைவனின் நாட்டத்திற்கு ஏற்ப நான் உங்களிடம் கூறுகின்றேன். இறைவனின் மகிமையை உங்கள் உள்ளங்களில் ஆழமாகப் பதிய வையுங்கள். அவனது ஏகத்துவத்தை நாவினால் மட்டுமல்லாமல் செயலினாலும் ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போது இறைவனும் செயலளவில் தனது அருளையும் கருணையையும் உங்கள் மீது பொழிவான். காழ்ப்புணர்ச்சி கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். படைப்பினங்களுடன் உண்மையான அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். நன்மையின் எல்லா வழிகளையும் பின்பற்றுங்கள். எந்த வழியின் மூலம் நீங்கள் ஏற்றுக் கொள்ளப் படுவீர்கள் என்பது உங்களுக்கு தெரியாது.

இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான களம் காலியாகவே உள்ளது என்ற நற்செய்தியை உங்களுக்கு நான் தெரிவிக்கின்றேன். ஒவ்வொரு சமுதாயமும் உலகத்தை நேசித்துக் கொண்டிருக்கின்றது. இறைவன் திருப்தியடையும் விஷயங்களின் பக்கம் உலகிலுள்ளவர் களுக்கு கவனமில்லை. எந்த மக்கள் முழுமையான வேகத்துடன் இந்த வாசலில் நுழைய விரும்புகின்றார்களோ அவர்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி இறைவனிடமிருந்து சிறப்பான அருட்கொடையை பெற்றுக்கொள்வதற்குரிய சந்தர்ப்பம் இதுதான்.

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருதவேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவனின் கரத்தினால் மண்ணில் விதைக்கப்பட்ட விதையாவீர்கள். இந்த விதை முளைக்கும்; பூக்கும்; எல்லா திசையிலும் இதன் கிளைகள் படரும்; பின்னர் வலுவானதொரு மரமாகிவிடும் என்று இறைவன் கூறியுள்ளான். எனவே இறைவனின் வசனத்தில் நம்பிக்கை

கொண்டு இடையில் ஏற்படும் சோதனைகளுக்கு அஞ்சாதவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். ஏனென்றால் சோதனைகள் வருவதும் அவசியமானதாகும். தமது பைஅத் வாதத்தில் உண்மையாளர் யார்? பொய்யர் யார்? என உங்களை சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கிறான். ஏதாவது சோதனையில் தடுமாற்றமடைபவன் இறைவனுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த மாட்டான். மேலும் பாக்கியமற்ற நிலை அவனை நரகத்திற்கு எடுத்துச் செல்லும். அவன் பிறக்காமல் இருந்தால் அது அவனுக்கு நன்றாக இருந்திருக்கும். ஆனால், எவர்கள் இறுதிவரை பொறுமையை மேற்கொள்வதுடன் துன்பங்கள் என்னும் பூமியதிர்ச்சிகளையும், ஆட்டங்காணச் செய்யும் விபத்துகள் என்னும் புயல்களையும் தாங்கிக் கொண்டு, உலகத்திலுள்ளவர்கள் அவர்களுடன் கடுமையான வெறுப்புடன் நடந்து கொள்வதையும், சமுதாயத்தின் ஏளனப் பேச்சையும், எள்ளி நகையாடுதலையும், இழிவையும் பொருட்படுத்தாது இருப்பார்களோ அவர்களே இறுதியில் வெற்றி பெறுவார்கள். அருள்களின் வாசல்கள் அவர்களுக்காக திறக்கப்படும்.

***என் ஜமாஅத்திற்கு அறிவிக்கும்படி இறைவன் எனக்கு கூறியுள்ளதாவது:***

"உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கையை கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவார்கள்.

காதுள்ளவர்களே கேளுங்கள்! அல்லாஹ் உங்களிடம் என்ன நாடுகின்றான்? அது நீங்கள் அவனுக்கே உரியர்களாகி விட வேண்டும் என்பதைத்தான். வானத்திலோ, பூமியிலோ அவனுக்கு எவரையும் நீங்கள் இணை வைக்காதீர்கள். முன்னர் உயிருடன் இருந்ததைப் போன்று இப்போதும் உயிருடன் இருக்கும் இறைவனே நம் இறைவன். முன்னர் அவன் பேசிக் கொண்டிருந்ததைப் போன்று இப்போதும் அவன் பேசுகின்றான். முன்னர் அவர் கேட்டுக் கொண்டிருந்ததைப் போன்று இப்போதும் கேட்கின்றான். இந்தக்





காலத்தில் அவன் கேட்கின்றான். ஆனால் பேசுவதில்லை என்பது முட்டாள்தனமாக சிந்தனையாகும். நிச்சயமாக அவன் கேட்கவும் செய்கின்றான்; பேசவும் செய்கின்றான். அவனுடைய எல்லா பண்புகளும் நிலையானவையும், என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவையுமாகும். அவனுடைய எந்தப் பண்பும் செயல் இழந்துவிடவில்லை. இனி ஒருபோதும் செயலிழந்தும் போகாது. அவன் ஈடுஇணையற்றவன். தனித்தவன். அவனுக்கு மகனோ மனைவியோ இல்லை. இணை இல்லாதவன் அவனே. தனக்கென குறிப்பிட்ட பண்பைக் கொண்டவன் அவனைப் போல் வேறு எவனுமில்லை. அவனுக்கு நிகராக எவனுமில்லை. குணயியல்புகளில் அவனை ஒத்தவன் வேறில்லை.

அவனுடைய ஆற்றல்களில் எக்குறையும் இல்லை. அவன் தொலைவில் இருந்தாலும் நெருக்கமானவன். நெருங்கியிருப்பினும் தொலைவில் உள்ளவன். ஆன்மீகக் காட்சிகளை காண்பவர்களிடத்தில் உருவக வடிவில் அவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலும் அவனுக்கு உடலோ உருவமோ இல்லை. அவன் மிக உயரியவன். ஆனால் அவனுக்கு கீழ் எதுவும் இருப்பதாக கூறியலாது. அவன் அர்ஷ் என்னும் அரியணையில் உள்ளான். ஆனால் பூமியில் அவன் இல்லை எனக் கூற முடியாது. அவன் எல்லா முழுமையான பண்புகளையும் ஒருங்கே கொண்டவன். உண்மையான புகழுக்குரிய எல்லா பண்புகளின் தோற்றமாவான். எல்லா நன்மைகளின் ஆரம்பமும் எல்லா பொருள்களின் முடிவும் அவனே. எல்லா நாடுகளுக்கும் அவனே எஜமான். முழுமைகள் எல்லாம் அவனிடத்தில் நிறைந்துள்ளன. எல்லா குறைகளிலிருந்தும் பலவீனங்களிலிருந்தும் தூய்மையானவன். பூமியிலுள்ளவர்களும், விண்ணிலுள்ளவர்களும், அனைவரும் வணங்கத்தக்க முழு உரிமை பெற்றவன் அவனே. அவனால் முடியாதது எதுவுமில்லை. எல்லா ஆன்மாக்களும் அவற்றின் ஆற்றல்களும் எல்லா அணுக்களும் அவற்றின் ஆற்றல்களும் அவன் படைத்தவையே. அவனின்றி எந்த பொருளும் உருவாகுவதில்லை. அவன் தனது ஆற்றல்கள், வல்லமைகள், அடையாளங்கள் மூலமாக தன்னை வெளிப்படுத்தி கொள்கின்றான்.

அவன் மூலமாகவே நாம் அவனை பெற்றுக்கொள்ள முடியும். அவன் தூய நல்லடியார்களிடம் எப்போதும் தனது இருப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றான். மேலும் தனது வல்லமைகளை அவர்களுக்கு காட்டுகின்றான். இவ்வழியின் மூலமே அவன் கண்டறியப்படுகின்றான். அவன் விரும்பும் வழியும் அவன் மூலமே கண்டறியப்படுகின்றது.

புறக்கண் இல்லாமலேயே அவன் பார்க்கின்றான். வெளிப்படையான காதுகள் இல்லாமலேயே அவன் கேட்கின்றான். வெளிப்படையான நாவு இல்லாமலேயே அவன் பேசுகின்றான். அவ்வாறே இல்லாமையிலிருந்து உருவாக்குவது அவன் வேலை யாகும். எவ்வித மூலப்பொருளும் இல்லாமல் ஓர் உலகத்தைப் படைப்பதையும், அழிந்து போகக்கூடிய ஒவ்வொன்றையும், இல்லாத ஒவ்வொன்றையும் இருக்கக்கூடியதாக அவன் காட்டு வதையும் நீங்கள் கனவுக் காட்சிகளில் காண்கின்றீர்கள். அவ்வாறே அவனுக்கு எல்லா ஆற்றல்களும் உள்ளன. அவனது வல்லமைகளை மறுப்பவர் அறிவிலி ஆவார். அவனது நுட்பமான ஆற்றல்களைப் பற்றி தெரியாதவர் குருடராவார். அவனது மகிமைக்கும் தூய்மைத் தன்மைக்கும் எதிராக அல்லது அவனது வாக்குறுதிகளுக்கு மாற்றமாக இருக்கும் விஷயங்களை தவிர மற்ற எல்லாவற்றையும் அவனால் செய்ய முடியும்; அவன் அவற்றை செய்கின்றான். அவன் தனது இருப்பிலும் பண்புகளிலும் செய்கைகளிலும் ஆற்றல்களிலும் தனித்தவன். அவனை அடைவதற்கு திருக்குர்ஆன் திறந்து தந்துள்ள வாசலைத்தவிர மற்ற எல்லா வாசல்களும் மூடப்பட்டுள்ளன. இதற்கு முன் வந்த நபித்துவத்தையும் வேதங்களையும் பின்பற்ற வேண்டிய தேவையில்லை. ஏனெனில் முஹம்மதிய நுபுவ்வத் அவை அனைத்தையும் உள்ளடக்கிய தாகவும் மிகைத்தும் நிற்கின்றது. இந்த வழியைத் தவிர மற்ற எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன. இறைவன் வரை கொண்டு செல்லக்கூடிய எல்லா உண்மைகளும் அந்த போதனையில்தான் இருக்கின்றன. இதற்கு பிறகு எந்த புதிய உண்மையும் வராது. அவ்வாறே இதில் இல்லாத எந்த ஓர் உண்மையும் இதற்கு முன்னர்





இருந்ததில்லை. எனவே முந்தைய எல்லா நபித்துவமும் இந்த நபித்துவத்தில் முடிவடைகிறது. மேலும் அவ்வாறே இருக்க வேண்டும். ஏனென்றால் எந்த பொருளுக்கு ஒரு ஆரம்பம் இருக்குமோ அதற்கு ஒரு முடிவும் இருக்கும். ஆனால், இந்த முஹம்மதிய நுபுவ்வத் சுயமாக அருள்பாலிக்க முடியாத ஒன்றல்ல; இன்னும் சொல்லப்போனால், எல்லா நபித்துவத்தை விடவும் அதிகமாக அருள்கள் இதில் இருக்கின்றன. இந்த நபித்துவத்தின் போதனைகளை பின்பற்றி நடப்பது ஒருவரை மிக எளிதான வழியில் இறைவனை அடைய வைக்கின்றது. மேலும் அப்போதனைகளை பின்பற்றுவதன் மூலம் இறைவனின் அன்பு, அவனுடன் உரையாடுதல் ஆகியவற்றின் மூலம் இதற்கு முன்னர் கிடைத்ததை விட சிறந்த அருட்கொடையை பெற்று கொள்ள முடியும். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றக்கூடிய ஒருவர் நபி என்று மட்டும் அழைக்கப்படமாட்டார். ஏனெனில், நிறைவு பெற்ற முழுமையான முஹம்மதிய நுபுவ்வத்திற்கு அதனால் இழிவு ஏற்படும். ஆயினும், உம்மத்தி (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றும் அவர்களது உம்மத்தை சார்ந்தவர்) என்ற சொல்லும் நபி என்ற சொல்லும் ஒருங்கிணைந்த நிலையில் அவருக்குப் பொருந்தும். ஏனெனில் நிறைவு பெற்ற, முழுமையான முஹம்மதிய்ய நுபுவ்வத்திற்கு அதனால் எந்த இழிவுமில்லை. இன்னும் சொல்லப் போனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலம் ஒருவர் நபித்துவத்தின் தகுதியைப் பெறும் இந்த அருட்கொடையினால் அந்த நபித்துவத்தின் ஒளி இன்னும் அதிகமாக வெளிப்படுகின்றது.[3] இறைவனோடுள்ள

*3 ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு புதிய ஷரீஅத்தைக் கொண்டு வருகின்ற நபித்துவத்தின் வாசல் முற்றிலும் அடைக்கப்பட்டு விட்டது. திருக்குர்ஆனுக்குப் பிறகு புதிய கட்டளைகளை போதிக்கின்ற அல்லது திருக்குர்ஆனின் கட்டளைகளை ரத்து செய்கின்ற அல்லது அதன் போதனைகளைப் பின்பற்றி நடப்பதைத் தடை செய்கின்ற எந்த வேதமும் இல்லை. மாறாக, அதன்படி செயல்படுவது மறுமைவரை நீடிக்கும்.*

உரையாடலும் உறவாடலும் அதன் இயல்பிலும் அளவிலும் முழுமையான தகுதியை அடைந்து விட்டால் மேலும் அதில் எவ்வித தூய்மையின்மையும் குறையும் எஞ்சியிருக்காமல் தெளிவான முறையில் மறைவான செய்திகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் போது அ(ந்த உரையாடலான)துதான் வேறு சொற்களில் நபித்துவம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. மேலும் இதில் எல்லா நபிமார்களும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். كُنتم خير أُمة أخرجت للناس மக்களுடைய பயனுக்காக தோற்றுவிக்கப் பெற்ற நீங்கள் சிறந்த கூட்டத்தினராவீர்கள் (3:111) என எந்த சமுதாயத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ, மேலும் எவர்களுக்காக اهدنا الصراط المستقيم صراط الذين انعمت عليهم நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. நீ அருள் புரிந்தவர்களின் வழியில் நீ எங்களைநடத்துவாயாக.(1:6,7)என்ற துஆ கற்றுத்தரப்பட்டுள்ளதோ அந்த சமுதாயத்திலுள்ள அனைவரும் இந்த உயர்வான தகுதியைப் பெறுவதிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டுவிட்டனர் என்பதும் ஒரு நபர் கூட இந்தத் தகுதியைப் பெற முடியாது என்பதும் சாத்தியமற்ற ஒன்றாகும். மேலும் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை பின்பற்றும் சமுதாயம் குறையுடைய தாகவும் முழுமையற்றதாகவும் அனைவரும் குருடர்களை போன்று ஆகிவிட்டார்கள் என்பது மட்டுமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள்களை வழங்கக்கூடிய ஆற்றலில் களங்கம் ஏற்படுவதாகவும் அவர்களின் தூய்மைபடுத்தும் ஆற்றல் குறைபாடுள்ளதாகவும் ஆகிவிடும். அத்துடன் எந்த துஆவை ஐவேளை தொழுகைகளில் ஓதும்படி போதிக்கப்பட்டுள்ளதோ அதனை கற்பிப்பதும் வீணானதாகிவிடும். ஆனால் மறுபக்கம் முஹம்மதிய நுபுவத்தின் ஒளியைப் பின்பற்றாமல் இந்த உம்மத்தை சார்ந்த எந்த நபராவது நேரடியாக இந்த உயர்தகுதியைப் பெறமுடியுமென்றால் ‘கத்மே நுபுவ்வத்’ என்பதன் பொருள் அபத்தமானதாகிவிடும். எனவே இந்த இரு தீமைகளிலிருந்தும் பாதுகாப்பதற்காகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை





பின்பற்றுவதில் தன்னை மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு முழுமையான தகுதியை பெற்ற சிலருக்கு இறைவன் தூய சொற்களில் சிறப்பாகவும் முழுமையாகவும் தன்னுடன் உரையாடுகின்ற நற்பேற்றை வழங்குகின்றான். இறைவனுக்கும் அவர்களுக்கும் இடையில் எவ்வித திரையும் இருப்பதில்லை. எம்பெருமானார் (ஸல்) அவர்களை உளப்பூர்வமாக பின்பற்றுவதில் எத்தகு முழுமையான தகுதியை அவர்கள் பெற்றுள்ளனரென்றால் அவர்கள் அவர்களாக இருப்பதில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அன்பில் அவர்களோடு ஒன்றென கலந்து அவர்களையே பிரதிபலிக்கின்ற பிரதிபிம்பமாகி விடுகின்றார்கள். மறுபக்கம் நபிமார்களுக்கு வழங்கப்பட்டது போன்றே முழுமையாகவும் நிறைவாகவும் இறைவனுடன் உரையாடுகின்ற நற்பேறு அவர்களுக்கு கிடைத்தது.

இவ்வாறே சிலர் (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றும்) உம்மத்தியாக இருந்தும் நபி என்ற பட்டத்தை பெற்றனர். ஏனெனில், இப்படிப்பட்ட நிலையிலுள்ள நபித்துவம் முஹம்மதிய நபித்துவத்திலிருந்தும் வேறுபட்டதல்ல. மாறாக, நீங்கள் சிந்தித்து பார்த்தால் இந்த நபித்துவம் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவமேயாகும். அது ஒரு புதிய தோற்றத்தில் வெளிப்பட்டுள்ளது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை பற்றி அவர் نبي الله وإمامُكم منكم - அல்லாஹ்வின் நபி என்றும் உங்களில் இருந்தே தோன்றி உங்களுக்கு இமாமாக இருப்பார் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் பொருளும் இதுதான். அதாவது அவர் நபியாகவும் இருப்பார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுகின்ற அவர்களது உம்மத்தை சார்ந்தவராகவும் இருப்பார். அவ்வாறில்லாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்தை சாராத ஒருவர் இந்த உயர் தகுதியை பெற முடியாது. இந்த நுட்பமான கருத்தை புரிந்து கொண்டவர்கள் அருளுக்குரியவர்கள் அதன் மூலம் அவர்கள் தங்களை அழிவிலிருந்தும் தற்காத்துக் கொள்கின்றனர்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இறைவன் மரணத்தைக் கொடுத்துவிட்டான். فلما توفيتني كنت أنت الرقيب عليهم - நீ எனக்கு மரணத்தை தந்த பின் நீயே அவர்களை கண்காணித்தவ னாக இருந்தாய் (5:118) என்ற இறைவனின் வசனம் மிகத்தெளிவாக இதற்கு சாட்சியாக இருக்கின்றது. இதற்கு முன்னுள்ள வசனங்களையும் சேர்த்து பார்க்கும் போது இதன் பொருள், மறுமை நாளில் இறைவன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம், என்னையும் என் தாயையும் இரு தெய்வங்களாக வணங்கும்படி உமது சமுதாயத்தினரிடம் நீர் கூறினீரா? என்று கேட்பான். அதற்கு அவர் நான் அவர்களுடன் இருந்தவரை நான் அவர்களுக்கு சாட்சியாக இருந்தேன். ஆனால், நீ எனக்கு மரணத்தை தந்த பிறகு எனக்கு பிறகு அவர்கள் எப்படிப்பட்ட வழிகேட்டில் இருந்தார்கள் என்பது பற்றி எனக்கு என்ன தெரியும்? என்று பதில் கூறுவார்கள். இப்போது இவ்வசனத்தை புரிந்து கொள்பவர் فلما توفيتني என்பதற்கு நீ எனக்கு மரணத்தைத் தந்த போது என்று பொருள் கொடுத்தாலும் சரி அல்லது உண்மைக்கு மாற்றமாக தனது பிடிவாதத்திலிருந்து விலகாமல், நீ என்னை இந்த பூத உடலுடன் வானத்திற்கு உயர்த்திய போது என்று பொருள் கொடுத்தாலும் சரி எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் இவ்வுலகிற்கு வரமாட்டார்கள் என்பது இந்த வசனத்திலிருந்து நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஏனெனில், மறுமை நாளுக்கு முன்பு அவர் மீண்டும் இவ்வுலகிற்கு வந்து சிலுவையை உடைத்திருந்தால் அந்நிலையில் இறைவனின் நபியாகிய ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் என்னையும் எனது தாயாரையும் இரு தெய்வங்களாக்கி எனது சமுதாயத்தினர் பின்பற்றிய குழப்பமான கொள்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்ற பெரும் பொய்யை இறைவன் முன்னிலையில் மறுமை நாளன்று ஒருபோதும் கூறமாட்டார். எந்த நபர் மீண்டும் இவ்வுலகிற்கு வந்து நாற்பது வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து கிறிஸ்தவர்களோடு போர் புரிவாரோ அவர் தன்னை நபி என்று கூறிக்கொண்டு எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்று வெறுக்கத்தக்க பொய்யை கூற முடியுமா? இந்த வசனம் ஹஸ்ரத்





ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் இவ்வுலகிற்கு வருவதை தடை செய்கிறது. அவ்வாறு இல்லையென்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பொய்யராக கருதப்படுவார். அவர் இந்த பூத உடலுடன் வானத்தில் இருக்கிறார் என்றால், இந்த வசனத்திலுள்ள கருத்துக்கேற்ப மறுமை நாள் வரை பூமியில் இறங்கமாட்டார் என்றால் அந்நிலையில் அவர் வானத்திலேயே மரணமடைவாரா? அவரது கல்லறை வானத்தில் இருக்குமா? ஆனால், வானத்தில் மரணிப்பது فيها تموتون - இப்பூமியிலேயே நீங்கள் மரணமடைவீர்கள் (7:26) என்ற வசனத்திற்கு மாற்றமானதாகும். எனவே, இதிலிருந்தும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு பூத உடலுடன் செல்லவில்லை; மாறாக, அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. அல்லாஹ்வின் வேதம் மிகத் தெளிவாக இந்த தீர்ப்பை கூறிய பிறகும் அல்லாஹ்வின் வேதத்திற்கு எதிராக செயல்படுவது பாவம் இல்லை எனறால் வேறு என்ன?

நான் வரவில்லையென்றால் அனுமானத்தின் அடிப்படையில் ஏற்படும் தவறுகள் மட்டும் மன்னிக்கத் தகுந்தவையாக இருந்திருக்கும். ஆனால் நான் இறைவனிடமிருந்து வந்த பிறகு திருக்குர்ஆனின் தெளிவான உண்மையான பொருள் திறக்கப்பட்ட பிறகும் தவறை கைவிடாமல் இருப்பது உண்மையான நம்பிக்கைக்கு உகந்ததல்ல. எனக்காக இறைவனின் அடையாளங்கள் விண்ணிலும் மண்ணிலும் வெளிப்பட்டுவிட்டன. இந்த நூற்றாண்டின் நான்கில் ஒரு பகுதியும் கூட கழிந்துவிட்டது. ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டுவிட்டன. உலகின் வயதில் ஏழாவது ஆயிரம் ஆண்டு ஆரம்பமாகிவிட்டது. இப்போது கூட உண்மையை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது எத்தகு கடினமான மனப்பாங்காக உள்ளது?

பாருங்கள்! இறைவனின் அடையாளங்கள் இன்னும் முடிவடையவில்லையென்று நான் உரத்த குரலில் கூறுகின்றேன். வெகு காலத்துக்கு முன்பே முன்னறிவிக்கப்பட்ட அந்த பூகம்பத்தின் அடையாளம் 1905 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி நிகழ்ந்த பிறகு, வசந்த காலத்தில் இன்னொரு கடுமையான பூகம்பம்

வரவிருக்கிறது என இறைவன் எனக்கு அறிவித்தான். அது வசந்த காலத்தின் நாட்களில் நிகழும். அது மரங்களில் புதிய இலைகள் அரும்புகின்ற வசந்த காலத்தின் ஆரம்ப நாட்களா? அல்லது அதன் மத்தியில் வரும் நாட்களா? அல்லது அதன் இறுதியில் வரும் நாட்களா? என்பது தெரியவில்லை. 'மீண்டும் வசந்த காலம் வந்தது; இறைவன் வார்த்தை மீண்டும் நிறைவேறியது' என்பதே இறையறிவிப்பின் சொற்களாகும். முதலாவது பூகம்பம் வசந்த காலத்தின் நாட்களிலேயே நிகழ்ந்ததால் இரண்டாவது பூகம்பமும் வசந்த காலத்தில்தான் நிகழும் என இறைவன் அறிவித்துள்ளான். ஜனவரி மாத முடிவில் சில மரங்களின் இலைகள் அரும்ப ஆரம்பித்து விடுவதால் இந்த மாதத்திலிருந்தே அச்சத்தின் நாட்கள் ஆரம்பமாகிவிடும். மேலும் அநேகமாக அவை மே மாதத்தின் இறுதிவரை நீடிக்கலாம்.[4]

زلزلة الساعة என்று இறைவன் கூறினான். அதாவது அந்த பூகம்பம் மறுமைநாளின் முன்மாதிரியாகத் திகழும். பிறகு لك نری آیاتٍ ونهدم ما يعمرون என்று அவன் என்னிடம் கூறினான். அதாவது உமக்காக நாம் அடையாளங்களைக் காட்டுவோம். கட்டப்படும் கட்டடங்களை நாம் அழித்து விடுவோம்.[5]

மேலும் இறைவன் என்னிடம் கூறினான்: ஒரு கடுமையான பூகம்பம் வந்தது. அது பூமியை தலைகீழாகப் புரட்டிவிட்டது. அதாவது கடுமையாக ஒரு பூகம்பம் வரும். அது பூமியின் சில பகுதிகளை லூத் நபியின் காலத்தில் நிகழ்ந்தது போன்று

*4 வசந்த காலத்தின் நாட்கள் என்பது இந்த இலையுதிர்காலம் கழிந்த பிறகு வரவிருக்கும் வசந்த காலத்தின் நாட்களா அல்லது வேறொரு சமயத்தில் வரும் வசந்தகாலத்தில் இந்த முன்னறிவிப்பு நிறைவேறுமா என்பது பற்றி எனக்குத் தெரியாது. எவ்வாறிருப்பினும் இறைவனது வார்த்தைகளில், அவை வசந்த காலத்தின் நாட்களாக இருக்கும் என்று தெரிய வருகிறது. அது எந்த வசந்த காலமாக இருந்தாலும் சரியே. ஆனால், இறைவன் இரவு நேரத்தில் மறைவாக வருகின்ற ஒருவரைப்போன்று வருவான். இவ்வாறே, இறைவன் என்னிடம் கூறியுள்ளான்.*

*5 இது தொடர்பாக, இன்னொரு இறையறிவிப்பு இவ்வாறு உள்ளது: உமக்காக எனது பெயர் பிரகாசித்தது.*





தலைகீழாகப் புரட்டிவிடும். மீண்டும் اني مع الافواج آتيك بغتة என இறைவன் கூறினான். அதாவது நான் என் படைகளுடன் இரகசியமாக வருவேன். அந்த நாள் எப்போது என எவரும் அறியமாட்டார். லூத் நபியின் காலத்தில் முழு நகரமும் தலைகீழாகப் புரட்டப்படும் வரை எவருக்கும் அது பற்றி தெரியாமலிருந்தது போன்று, எல்லாரும் உணவு உண்டு, பானங்கள் பருகிக்கொண்டு உல்லாசமாக இருந்த சமயத்தில் திடீரென்று பூமி தலைகீழாக்கப்பட்டது போன்று அந்நாளில் ஏற்படவிருக்கும் பூகம்பம் பற்றி எவரும் அறியமாட்டார். இங்கும் அவ்வாறே நடக்கும் என்று இறைவன் கூறுகின்றான். ஏனென்றால், பாவம் எல்லை மீறிவிட்டது. மனிதன் அளவுக்கு அதிகமாக உலகை நேசிக்கின்றான். இறைவனின் வழி ஏளனப் பார்வையுடன் பார்க்கப் படுகிறது. பிறகு, **ஸிந்தகியோன் கா ஹாத்திமா** - வாழ்க்கை களின் முடிவு என்று அவன் கூறினான்.

மேலும் இறைவன் என்னை நோக்கி قال ربك انه نازل من السماء ما يرضيك رحمة منا وكان امرًا مقضيا என்று கூறினான். அதாவது உம்மை மகிழ்விக்கக்கூடிய ஒரு விஷயம் விண்ணிலிருந்து இறங்கும். இது எம்மிடமிருந்து வரும் கருணையாகும். இது ஆரம்பம்தொட்டே விதிக்கப்பட்ட தீர்மானிக்கப்பட்ட விஷயமாகும் என உமது இறைவன் கூறினான். பல்வேறு சமுதாயங்கள் மத்தியில் இந்த முன்னறிவிப்பு வெளியிடப்படும் வரை இவ்விஷயத்தை இறக்குவதை வானம் நிறுத்தி வைக்க வேண்டியது அவசியமான தாகும். நற்பேறு பெற்றவர்களைத் தவிர நமது விஷயங்களின் மீது நம்பிக்கை கொள்பவர் யார்?

அச்சத்தையும் பீதியையும் பரப்புவதற்காக நான் இந்த அறிவிப்பை செய்யவில்லை என்பதை நினைவில் வைத்து கொள்ள வேண்டும். வரவிருக்கும் கடுமையான அபாயங்களிலிருந்து தற்காத்து கொள்வதற்காகவும் இதனை அறியாத நிலையில் எவரும் அழிந்துவிடக்கூடாது என்பதற்காகவுமே நான் இந்த அறிவிப்பை செய்துள்ளேன்.

ஒவ்வொரு விஷயமும் எண்ணங்களுடன் தொடர்புடைய வையாக உள்ளன. மக்களை துன்புறுத்த வேண்டும் என்பது நமது எண்ணமல்ல. மாறாக அவர்களை துன்பத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதே நமது எண்ணமாகும். எவர்கள் பாவமன்னிப்பு கோருவார்களோ அவர்கள் இறைவனின் தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். ஆனால் பாவமன்னிப்புக் கோராமலும் இறைவனின் விஷயங்களை எள்ளி நகையாடும் சபைகளை விட்டு விலகாமலும் தீய செயல்களிலிருந்தும் பாவத்திலிருந்தும் விலகாமலும் இருக்கும் அப்படிப்பட்ட துர்பாக்கியசாலிகளின் அழிவின் நாட்கள் அருகில் இருக்கின்றன. ஏனென்றால், இப்படிப்பட்டவரது அகம்பாவம் இறைவனின் பார்வையில் அவனது கோபத்திற்கு உரியதாக இருக்கின்றது.

இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமானதாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இறைவன் எனது மரணத்தை பற்றி எனக்கு தெரிவித்துள்ளான். மேலும் எனது ஆயுட்காலம் பற்றி இன்னும் சில நாட்களே எஞ்சியுள்ளன என்று அவன் என்னை நோக்கிக் கூறினான். எல்லாவிதமான அழிவுகளும் இயற்கையின் ஆச்சரியங்களும் காட்டப்பட்டபின் உமக்கு மரணம் வரும் என்றும் அவன் என்னிடம் கூறினான். எனது மரணத்திற்கு முன்னர் உலகில் பல அழிவுகள் நிகழ்வதையும் இயற்கையின் சில வியக்கத்தக்க நிகழ்வுகள் வெளிப்படுவதையும் இது சுட்டிக் காட்டுகின்றது. அதன் மூலமாக உலகம் ஒரு புரட்சிக்காக தயாராகி விடும். இந்தப்புரட்சிக்கு பிறகு எனது மரணம் நிகழும்.

இது உமது கல்லறையின் இடமாகும் என ஓர் இடம் எனக்குக் காட்டப்பட்டது. ஒரு வானவர் நிலத்தை அளந்து கொண்டிருப்பதை நான் கண்டேன். அப்போது ஓர் இடத்தை அடைந்ததும், இது உமது கல்லறையின் இடமாகும் என அவர் என்னிடம் கூறினார். பிறகு ஓரிடத்தில் எனக்கு ஒரு கல்லறை காட்டப்பட்டது. அது வெள்ளியை விடவும் அதிகமாக பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த இடத்து மணல் எல்லாம் வெள்ளியாகவே இருந்தது. அப்போது என்னிடம்





உமது கல்லறை எனக் கூறப்பட்டது. இன்னோர் இடமும் எனக்குக் காட்டப்பட்டது. அதற்கு **பெஹஷ்தி மக்பரா (சுவர்க்கத்திற் குரியவர்களின் கல்லறை)** எனப் பெயர் வைக்கப்பட்டது. அது சுவர்க்கம் செல்லக்கூடிய ஜமாஅத்திலுள்ள அந்த தூய மக்களின் கல்லறைகள் என்று எனக்கு தெரிவிக்கப்பட்டது. அப்போதிருந்தே ஜமாஅத்திலுள்ளவர்கள் மரணித்தால் அவர்களை அடக்கம் செய்ய கபருஸ்தானுக்கென்று ஒரு நிலம் வாங்க வேண்டும் என்ற கவலை எனக்கு எப்பொழுதும் இருந்து வந்தது. ஆனால் பொருத்தமான நல்ல நிலங்களின் விலை மிகவும் அதிகமாக இருந்ததால் இந்தக் குறிக்கோள் நீண்ட காலமாக நிறைவேறாமல் காலதாமதமாகி விட்டது. இப்போது எனது சகோதரர் மர்ஹூம் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களின் மரணத்திற்குப் பிறகு எனது மரணம் பற்றியும் தொடர்ச்சியாக இறையறிவிப்புகள் வந்ததால் கபருஸ்தானுக்கான ஏற்பாட்டை விரைவாக செய்வதே பொருத்த மானது என நான் கருதினேன். இதற்காக எனது தோட்டத்திற்கு அருகிலுள்ள எனது சொத்திலுள்ள நிலத்தை இந்த பணிக்காக தேர்ந்தெடுத்தேன். அதன் தற்போதைய விலை ஆயிரம் ரூபாயை விட குறைவாக இருக்க முடியாது. இதில் இறைவன் அருள் புரிவானாக. இதனையே **பெஹஷ்தி மக்பரா (சுவர்க்கத்திற் குரியவர்களின் கல்லறை)** ஆக ஆக்குவானாக. உண்மையிலேயே உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி உலகின் நேசத்தை விட்டுவிட்டு தங்களை இறைவனுக்காக ஆக்கிகொண்டு தங்களிடத்தில் தூய்மையான மாறுதலை உருவாக்கி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்களைப் போன்று நன்றியுணர்வு, உண்மை ஆகியவற்றின் முன்மாதிரியை காட்டிய இந்த ஜமாஅத்தை சேர்ந்த தூய உள்ளம் கொண்ட மக்கள் இறுதியாக ஓய்வெடுக்கும் இடமாக அது இருக்கட்டுமாக என்று நான் இறைவனிடம் துஆ செய்கின்றேன். **ஆமீன் யா ரப்பல் ஆலமீன்.**

***மீண்டும் நான் துஆ செய்கிறேன்.***

“வல்லமைமிக்க என் இறைவா! தங்கள் பணிகளில் உலக நோக்கங்களை கலக்காதவர்களாகவும் உண்மையிலேயே

உனக்காகவே ஆகிவிட்ட என் ஜமாஅத்தை சேர்ந்த அந்த தூய உள்ளங்களின் கல்லறையாக இதனை ஆக்குவாயாக. **ஆமீன் யா ரப்பல் ஆலமீன்.”**

மீண்டும் நான் மூன்றாம் முறை துஆ செய்கின்றேன். வல்லமைமிக்க கருணைமிக்க என் இறைவா! அதிகமாக மன்னிக்கின்ற மீண்டும் மீண்டும் கருணைகாட்டும் இறைவா! உன்னால் அனுப்பப் பட்டுள்ள இந்த தூதர் மீது உண்மையான நம்பிக்கை வைத்து எவ்வித வஞ்சமும் சுயநலமும் தப்பெண்ணமும்[6] தங்களிடத்தில் இல்லாமல்

6 *தப்பெண்ணம் கொள்வது மனிதனிடமுள்ள கொடிய நோயாகும். நெருப்பு காய்ந்த விறகை எரிப்பது போல் அது ஈமானை விரைவில் எரித்து விடுகிறது. மேலும், இத்தகு நோயுள்ள மக்கள் இறைவனால் அனுப்பப்பட்டவரைப் பற்றித் தப்பெண்ணம் கொண்டு அவரைத் துன்புறுத்துகின்ற போது இறைவனே அவர்களுக்கு எதிரியாகி அவர்களுடன் போரிடத் தயாராகின்றான். அவன் தன் நல்லடியார்களிடம் கண்ணியத்தைக் காப்பதில் வைத்துள்ள தன்மான உணர்வு ஈடிணையற்றது. நான் பல்வேறு தாக்குதல்களுக்கு ஆளானபோது அந்த இறைவனின் அதே தன்மான உணர்வுதான் பாதுகாப்பிற்காக செயல்பட்டது. இது தொடர்பாக அவன் என்னிடம் இவ்வாறு கூறினான்.*

إني مع الرسول أقوم وألوم من يلوم وأعطيك ما يدوم لك درجة
في السماء وفي الذين هم يبصرون. ولك نرى آيات ونهدم ما
يعمرون. وقالوا أتجعل فيها من يفسد فيها قال إني أعلم ما لا
تعلمون. إني مهين من أراد إهانتك. لا تخف إني لا يخاف لدي
المرسلون. أتى أمر الله فلا تستعجلوه. بشارة تلقاها النبيون. يا
أحمدي أنت مرادي ومعي. أنت مني بمنزلة توحيدي وتفريدي
وأنت مني بمنزلة لا يعلمها الخلق وأنت وجيه في حضرتي
اخترتك لنفسي إذا غضبت غضبت وكلما أحببت أحببت. [illegible]
الله على كل شيء. الحمد لله الذي جعلك المسيح ابن مريم. لا
يسئل عما يفعل وهم يسئلون. وكان وعدا مفعولا. يعصمك الله
من العدا. ويسطو بكل من سطا. ذلك بما عصوا وكانوا
يعتدون. أليس الله بكاف عبده. يا جبال أوبي معه والطير
كتب الله لأغلبن أنا ورسلي. وهم من بعد غلبهم سيغلبون. إن
الله مع الذين اتقوا والذين هم محسنون. إن الذين آمنوا إن لهم
قدم صدق عند ربهم. سلام قولا من رب رحيم. وامتازوا اليوم
أيها المجرمون

*நான் எனது தூதருடன் இருக்கின்றேன். அவருடன் நிற்கின்றேன். எவர் உம்மை குற்றவாளியாக்க முயற்சி செய்கின்றாரோ அவரை நான் குற்றவாளியாக்கி விடுகின்றேன். எப்போதும் நிலைத்திருப்பதை நான் உனக்கு வழங்குவேன். உமக்கு சுவர்க்கத்திலும் அகப் பார்வையுடையவர்களிடத்திலும் ஓர் உயர்தகுதி உள்ளது.*

*உமக்காக நாம் அடையாளங் களை காட்டுவோம். அவர்கள் கட்டுவதை நாம் உடைத்து விடுவோம். மேலும் அவர்கள் அதில் குழப்பம் விளைவிக்கப் போகின்றவர்களையா நீ உருவாக்கப் போகின்றாய்? என்று கேட்கின்றனர். அதற்கு*





நம்பிக்கையின் கட்டுப்படுதலின் உரிமையை முழுமையாக நிறைவேற்றுபவர்களாகவும் உனக்காக உனது வழியில் தமது உயிரை அர்ப்பணிப்பவர்களாக இருப்பவர்களுக்கும், எவர்களிடத்தில் நீ திருப்தியடைந்து, அவர்கள் முற்றிலும் உனது அன்பில் தங்களையே இழந்து, உனது தூதரிடத்தில் உளப்பூர்வமான நம்பிக்கையுடனும் முழுமையான மரியாதையுடனும் அன்புடனும் அத்தூதருக்காக அனைத்தையும் அர்ப்பணிக்கும் அளவில் தங்களது தொடர்பை

*நான்அறிவதை நீங்கள் அறிய மாட்டீர்கள் என அவன் பதில் கூறினான். உம்மை இழிவுபடுத்த முயற்சி செய்பவரை நான் இழிவுபடுத்துவேன். நீர் அஞ்ச வேண்டாம். நிச்சயமாக நான் தூதர்களுடன் இருக்கும் போது அவர்கள் அஞ்சவேண்டியதில்லை. அல்லாஹ்வின் கட்டளை வந்துவிட்டது. அது தொடர்பாக நீங்கள் அவசரப்பட வேண்டாம். நபிமார்களுக்குக் கூறப்பட்ட நற்செய்திகள் உள்ளன.*

*அஹ்மதே நீர் எனது குறிக்கோளாக இருக்கின்றீர். மேலும் நீர் என்னுடன் இருக்கின்றீர். நீர் என்னிடத்தில் எனது ஏகத்துவத்தின் அந்தஸ்தில் இருக்கின்றீர். என்னிடத்தில் உமக்கு இருக்கும் அந்தஸ்தைக் குறித்து உலகிலுள்ள எவரும் அறியமாட்டார். எனது முன்னிலையில் நீர் கண்ணியத்திற்குரியவராக இருக்கின்றீர். உம்மை எனக்காக நான் தேர்ந்தெடுத்துள்ளேன். நீர் கோபப்படும்போது நானும் கோபப்படுகின்றேன். எவற்றையெல்லாம் நீர் விரும்புகின்றீரோ அவற்றை நானும் விரும்புகின்றேன். எல்லாவற்றையும் விட அல்லாஹ் உமக்கே முன்னுரிமை வழங்கியுள்ளான். உம்மை மஸீஹிப்னு மர்யமாக ஆக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் செய்பவற்றைப் பற்றி எவரும் அவனிடம் கேட்க முடியாது. அவர்கள் செய்பவற்றைப்பற்றி அவர்களிடம் கேட்கப்படும். அது நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதியாக இருந்தது. அல்லாஹ் எதிரிகளிடமிருந்து உம்மைப் பாதுகாப்பான். உம்மீது தாக்குதல் நடத்தும் அனைவரையும் அவன் தாக்குவான். இது அவர்கள் கீழ்படியாமலும் வரம்பு மீறி செயல்பட்டதினாலேயேயாகும். அல்லாஹ் தன் அடியானுக்குப் போதுமானவன் அல்லவா? மலைகளே! பறவைகளே! அவருடன் பணிவோடு குனியுங்கள். நானும் என் தூதர்களும் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என அல்லாஹ் விதித்து விட்டான். அவர்கள் தமது தோல்விக்குப் பிறகு வெற்றி பெறுவார்கள். நிச்சயமாக அல்லாஹ் இறையச்சத்தை மேற்கொண்டு நடப்பவர்களுடனும் நல்லவர்களுடனும் இருக்கின்றான். எவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனரோ அவர்கள் உண்மையுடனும் உறுதியுடனும் தங்கள் இறைவனுடன் இருக்கும் தகுதியை பெற்றுள்ளனர். கருணைமிக்க இறைவனின் வார்த்தை சாந்தி என்பதாகும். இந்த நாளில் குற்றவாளிகள் பிரித்தறியப்படுவார்கள்.*

விடுவித்துக் கொள்வதுதான் சிறந்தது.



நிலைநாட்டியுள்ளனர் என எவர்கள் பற்றி உனக்கு தெரியுமோ அப்படிப்பட்ட மக்களுக்கு இந்த கபருஸ்த்தானில் இடம் அளிப்பாக. **ஆமீன் யா ரப்பல் ஆலமீன்.**

இந்த கபருஸ்த்தான் தொடர்பாக மிக மகிழ்ச்சிகரமான நற்செய்திகள் எனக்கு கிடைத்துள்ளன. இது சுவர்க்கவாசிகளின் கல்லறை என்று மட்டும் இறைவன் கூறவில்லை. மாறாக, اُنْزِلَ فِيْهَا كُلُّ رَحْمَةٍ அதாவது, எல்லா விதமான அருள்களும் இந்த கபருஸ்தானில் இறக்கப்பட்டுள்ளன என்றும் இதில் அடக்கம் செய்யப்படுபவர்களின் பங்கில் வராத எந்த வகையான அருளும் இருக்காது என்றும் இறைவன் கூறியுள்ளான். எனவே, இந்த கபருஸ்த்தானில் அடக்கம் செய்யப்படுவதற்கு சில நிபந்தனைகளை விதிப்பதற்காக எனது உள்ளத்தை தனது இறையறிவிப்பின் மூலம் இறைவன் திருப்பினான்.

தங்களிடத்திலுள்ள உண்மை மற்றும் முழுமையான தூய்மை ஆகியவற்றின் காரணமாக இந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்படுபவர்களே இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படுவர். அவை மூன்று நிபந்தனைகளாகும். அவை அனைத்தும் நிறைவேற்றப் பட வேண்டும்.

1) இந்த கபருஸ்தானிற்குரிய தற்போதைய நிலத்தை நான் என் சார்பாக நன்கொடையாக வழங்கியிருக்கின்றேன். இதன் சார்பாக உள்ள திட்டத்தை நிறைவேற்ற இன்னும் கொஞ்சம் நிலம் வாங்க வேண்டியதிருக்கிறது. அதன் விலை ஏறக்குறைய ஆயிரம் ரூபாயாகும். அந்நிலத்தை அழகுபடுத்த சில மரங்கள் நடப்படும். ஒரு கிணறும் தோண்டப்படும். இந்த கபருஸ்தானுக்கு வடக்கே நடைபாதையில் பெருமளவு தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதனை கடந்து செல்ல ஒரு பாலம் கட்டப்படும். இப்படிப்பட்ட பல்வேறு செலவுகளுக்காக இரண்டாயிரம் ரூபாய் தேவைப்படும். ஆக, இந்த எல்லா பணிகளையும் நிறைவேற்ற மொத்தம் 3,000 ரூபாய் செலவிடப்படும். எனவே முதல் நிபந்தனை, இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப்பட விரும்பும் ஒவ்வொரு நபரும் தங்கள்





தகுதிக்கேற்ப இந்த செலவுகளுக்காக சந்தா கொடுக்க வேண்டும். இந்த சந்தா அவர்களிடமிருந்து மட்டுமே பெறப்படும். மற்றவர் களிடமிருந்து பெறப்படமாட்டாது. தற்போதைக்கு இந்த சந்தாக்கள் நம்முடைய மதிப்பிற்குரிய சகோதரர் மவ்லவி நூருத்தீன் சாஹிபிடம் வந்து சேர வேண்டும். ஆனால், இறைவன் விரும்பினால் இக்கபருஸ்தானை நிர்வகிக்கும் இந்தப் பணி நாமெல்லாம் மரணித்த பிறகும் நீடித்திருக்கும். அந்த வகையில் இதற்காக அவ்வப்போது ஒன்று திரட்டப்படும் நிதியை இஸ்லாத்தின் கலிமாவை மேலோங்கச் செய்வதற்காகவும் ஏகத்துவத்தை பரப்புவதற்காகவும் பொருத்தமாக செலவு செய்ய ஓர் அஞ்சுமன் (அமைப்பு) இருக்க வேண்டும்.

2) இரண்டாவது நிபந்தனை, முழு ஜமாஅத்தின் உறுப்பினர்களில் எவர் ஒருவர் தமது மரணத்திற்குப் பிறகு விட்டுச்செல்லும் தமது அனைத்து சொத்திலும் பத்தில் ஒரு பங்கினை நமது கட்டளைக்கிணங்க இந்த இயக்கத்தின் மூலமாக இஸ்லாத்தைப் பரப்புவதற்காகவும் திருக்குர்ஆனின் கட்டளை களைப் பரப்புவதற்காகவும் செலவு செய்வதாக தன்னுடைய வாழ்நாளில் உயில் எழுதி வைத்துவிட்டு செல்கிறாரோ அவரே இந்தக் கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படுவார். முழுமைபெற்ற ஈமானுடைய ஒவ்வொரு உண்மையாளரும் இதைவிட அதிகமாக தமது வஸிய்யத்தில் (உயிலில்) எழுதலாம். ஆனால் இதைவிட குறைவாக அது இருக்கக் கூடாது. மேலும் இதன் மூலம் வருவாயாக வரும் நிதி நேர்மையை கைக்கொள்கின்ற கல்வியறிவு படைத்த நபர்களடங்கிய அஞ்சுமனிடம் (அமைப்பிடம்) ஒப்படைக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களது ஆலோசனைக்கேற்ப இந்த நிதியை இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காகவும் திருக்குர்ஆனின் ஞானத்தையும் மார்க்க நூல்களின் அறிவையும் பரப்புவதற்காகவும் இந்த இயக்கத்தை சார்ந்த போதகர்களுக்காகவும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள வழிகாட்டலுக்கேற்ப செலவு செய்வார்கள்.

இந்த இயக்கத்தை வளர்ச்சியடைய செய்வதாக இறைவன் வாக்குறுதியளித்துள்ளான். இஸ்லாத்தை பரப்புவதற்காக தேவையான

நிதியும் அதிகமாக ஒன்று சேர்ந்துவிடும் என்ற நம்பிக்கை யிருக்கின்றது. இஸ்லாமிய பிரச்சாரத்திற்காக தேவைப்படும் எல்லாவற்றையும் பற்றிய விபரங்களை தற்போது எடுத்துரைப்பது காலத்திற்கு முந்திய செயலாகும். அந்த அனைத்து தேவைகளும் இந்த நிதியின் மூலம் நிறைவேறும். இப்பொறுப்பை சரியாக செய்து வரும் ஒரு குழு மரணமடைந்த பிறகு அவர்களை பின்தொடர்ந்து வரும் பிரதிநிதிகளின் மீது இந்த எல்லா தொண்டுகளையும் அஹ்மதிய்யா இயக்கத்தின் வழிகாட்டலுக்கிணங்க செயல்படுத்துவது கடமையாகும்.

இந்த நிதியிலிருந்து அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும் இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ள வாழ்க்கையை நடத்த போதிய வருமானமில்லாத புதிய முஸ்லிம்களுக்கும் பங்குண்டு. இந்த நிதியை அதிகப்படுத்துவதற்காக இதனை வியாபாரத்திற்காக முதலீடு செய்ய அனுமதியளிக்கப்படுகிறது.

இவையாவும் நமது யூகங்களுக்கு மிக தொலைவில் உள்ள விஷயங்கள் தான் என்று எண்ணிவிடாதீர்கள். மாறாக இது பூமி, வானம் ஆகியவற்றின் அரசனாக இருக்கின்ற அந்த வல்லமைமிக்க இறைவனின் நாட்டமாகும். இந்த செல்வங்கள் எவ்வாறு ஒன்றுசேரும் என்று கவலை எனக்கில்லை. நேர்மையுடனும் தைரியத்துடனும் இந்த பணிகளை செய்துகாட்டக் கூடிய ஜமாஅத் எவ்வாறு உருவாகும் என்ற கவலையும் எனக்கில்லை. மாறாக, நமது காலகட்டத்திற்குப் பிறகு எந்த மக்களிடம் இந்த செல்வங்கள் ஒப்படைக்கப்படுமோ அவர்கள் செல்வம் அதிகமாக இருப்பதைக் கண்டு தடுமாற்றமடைந்து, உலகத்தை நேசித்துவிடக்கூடாதே என்ற கவலைதான் எனக்கு இருக்கின்றது.

எனவே இறைவனுக்காக பணியாற்றுகின்ற நேர்மையுடன் செயல்படக்கூடியவர்கள் எப்போதும் இந்த இயக்கத்தில் இருந்துவர வேண்டும் என்று நான் துஆ செய்கின்றேன். ஆயினும் எவரிடம் தனது வாழ்நாளைக் கழிப்பதற்கு எதுவுமில்லையோ அவரது செலவு களுக்காக உதவியாக இந்நிதியிலிருந்து வழங்க அனுமதியுண்டு.





3) மூன்றாவது நிபந்தனை, இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படுபவர் இறையச்சமுள்ளவராகவும், இறைவன் தடுத்தவற்றிலிருந்து விலகி நிற்பவராகவும், இறைவனுக்கு இணை வைக்காதவராகவும் மார்க்கத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடாதவராகவும் இருக்க வேண்டும். உண்மையான தூய முஸ்லிமாக இருக்க வேண்டும்.

4) நான்காவது நிபந்தனை, தன்னிடம் எந்த சொத்தும் இல்லாத ஒவ்வொரு நல்லவரும் செல்வத்தால் அவர் இந்த இயக்கத்திற்கு எந்த தொண்டும் செய்ய முடியவில்லையென்றாலும் அவர் மார்க்கத்தற்காக தனது வாழ்வை அர்ப்பணித்திருந்தார் என்பதும் அவர் நல்ல மனிதர் என்பதும் நிரூபிக்கப்பட்டால் அவரை இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யலாம்.

## வழிகாட்டல்

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையில் வஸிய்யத் செய்ய விரும்புகின்ற ஒவ்வொருவரும் தனது வாழ்நாளிலேயே அதனை எழுதி இந்த தொண்டிற்காக ஜமாஅத்திலிருந்து நியமிக்கப்பட்டவரிடம் அதனை ஒப்படைப்பது கட்டாயமானதாகும். அவ்வாறே அது அச்சடித்து வெளியிடப்படவும் வேண்டும். அவரது வஸிய்யத் அவரது மரணத்திற்கு பிறகே நடைமுறைப்படுத்தப்படும். ஏனென்றால், மரணத்தருவாயில் பெரும்பாலான உயில்களை எழுதுவ தென்பது கடினமான ஒரு விஷயமாகும். வானத்தின் அடையாளங்களும் துன்பங்களும் வெளிப்படும் நாட்கள் அருகில் இருப்பதால் இறைவனின் பார்வையில் அமைதியான இந்த நாட்களில் தனது வஸிய்யத்தை எழுதுபவருக்கு மிகப்பெரும் தகுதி இருக்கின்றது. மேலும் இந்த வஸிய்யத் எழுதுவதில் எவரது செல்வம் நிரந்தரமாக உதவக் கூடியதாக இருக்குமோ அவருக்கு நிரந்தரமான நற்கூலியும் கிடைக்கும் தொடர்ந்து நிலைத்திருக்கும் நன்மையாக அது கருதப்படும்.

2. காதியானிலிருந்தும் தொலைவில் இந்த நாட்டின் வேறு பகுதிகளில் உள்ளவர்கள் மேலே எழுதப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் பட்சத்தில் அவரது வாரிசுகள் அவரது மரணத்திற்குப் பிறகு ஒரு பெட்டியில் அவரது உடலை வைத்து அதனை காதியானுக்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இந்த கபருஸ்தான் முழுமையடைவதற்கு முன்னர் அதாவது பாலம் போன்றவை கட்டப்படுவதற்கு முன்னர் எவராவது மரணித்து விட்டால், அவர் நிபந்தனைகளுக்கு ஏற்ப இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப் படுபவராக இருந்தால், அப்படிப்பட்டவரது உடலை அமானத்தாக ஒரு பெட்டியில் வைத்து அவரது இடத்திலேயே அடக்கம் செய்ய வேண்டும். கபருஸ்தானுக்கு தேவையான அனைத்தும் தயாரான பிறகு அந்த சடலத்தை காதியான் கொண்டுவர வேண்டும். ஆனால், எவர் பெட்டியில் வைக்கப்படாமல் அடக்கம் செய்யப்படுவாரோ அவரது சடலத்தை கபரிலிருந்து தோண்டி வெளியில் எடுப்பது பொருத்தமான செயலல்ல.[7]

முழுமைபெற்ற ஈமானையுடைய இப்படிப்பட்ட அனைவருக்கும் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்படவேண்டும் என்பது இறைவனின் எண்ணமாகும். வருங்கால தலைமுறை ஒரே இடத்தில் இவர்களைக் கண்டு தங்களது ஈமானைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். மேலும் அவர்களது பணிகள் அதாவது இறைவனுக்காக அவர்கள் செய்த மார்க்கப் பணிகள் நிரந்தரமாக சமுதாயத்திற்குத் தெரிய வேண்டும்.

*7 எந்த அறிவிலியும் இந்த கபருஸ்தானையும் இந்த ஏற்பாட்டையும் பித்அத் (மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுபவை) என்று கருத வேண்டாம். ஏனெனில், இந்த ஏற்பாடு இறையறிவிப்பிற்கேற்பவே உள்ளது. மனிதனின் எவ்வித தலையீடும் இதில் இல்லை. இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படுவதால் ஒருவர் சுவர்க்கத்திற்கு உரியவராக எப்படி ஆக முடியும்? என எவரும் நினைக்க வேண்டாம். ஏனெனில், இந்த நிலம் ஒருவரை சுவர்க்கவாசியாக்கிவிடும் என்பது இதன் பொருளன்று. மாறாக, சுவர்க்கத்திற்குரியவர்கள் மட்டுமே இக்கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படுவார்கள் என்பதே இறைவனுடைய கூற்றின் பொருளாகும்.*





இறுதியில் நாம் துஆ செய்கின்றோம்.

இறைவன் இந்த பணியில் உளப்பூர்வமாக செயல்படும் ஒவ்வொருவருக்கும் உதவி செய்வானாக. அவரது ஈமானை மேலும் வலுப்படுத்துவானாக. அவரது முடிவை நல்லதாக்கி வைப்பானாக. ஆமீன்.

நம்முடைய ஜமாஅத்தில் எவர்களுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றி தெரிய வருகிறதோ அவர்கள் அதனை தமது நண்பர்களுக்குத் தெரிவிப்பதுடன் முடிந்தவரை அதைப்பரப்ப வேண்டும். மேலும் வருங்கால சந்ததிகளுக்காக இந்த எழுத்துக்களை பாதுகாத்து வைக்க வேண்டும். எதிரிகளுக்கும் நாகரீகமான முறையில் இது பற்றி தெரிவிக்க வேண்டும். கடுமையாக ஏசிப்பேசுகின்றவர்களின் சொற்களை கேட்டு பொறுமையுடன் இருக்க வேண்டும். எப்போதும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்.

இதனை எழுதிய இந்த எளியவன்
**குலாம் அஹ்மத்**
20, டிசம்பர் 1905

## *அல் வஸிய்யத் நூலில் இடம் பெற்றுள்ள ஃபார்ஸி கவிதையின் தமிழ் மொழியாக்கம்*

*1. நீங்கள் தூய சந்ததிகள் என்பதையும் அறிவுடையவர்கள் என்பதையும் நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். உலகின் மீதுள்ள பேராசையின் காரணமாக உங்கள் மார்க்கத்தை ஒருபோதும் நீங்கள் பாழாக்கி விடவேண்டாம்.*

*2. ஒருபோதும் இந்த நிலையற்ற உலகுடன் உங்களது உள்ளத்தை இணைத்துக் கொள்ளாதீர்கள். ஏனென்றால், இதிலுள்ள சுகமும், மகிழ்ச்சியும் உண்மையில் தன்னகத்தே நூற்றுக்கணக்கான துக்கங்களையும் துயரங்களையும் மறைத்து வைத்துள்ளது.*

*3. உணர்வுள்ள உங்கள் காதுகள் திறந்திருந்தால் உங்கள் காது களுக்கு கல்லறையிலிருந்து ஓர் ஓசை வரும்.*

4. எனது இன்பமே! சில நாட்கள் உயிர் வாழ்வதற்காக நீ இந்த அற்பு உலகின் எண்ணத்திலும் கவலையிலும் உன்னையே எரித்து கொள்ளாதே என்பதுதான் அந்த ஓசை.

5. இந்த அற்ப உலக வாழ்வில் மூழ்கியிருக்கும் ஒவ்வொரு நபரும் உண்மையிலேயே தனக்கென்று துக்கத்தையும், வேதனையையும், தண்டனையையும் பெற்றுக் கொள்கின்றார்.

6. இதற்கெதிரில் தனது பார்வையை எப்போதும் மரணத்தை நோக்கியே வைத்திருப்பவர் (இரவு பகலாக மரணத்தை நினைவு கூர்பவர்) நல்ல சிறந்த மனிதராவார். அவர் உலகை முற்றிலும் விட்டு விட்டு நேரான வழியில் செயல்படுபவராகவும் அதில் நிலைத்திருப்பவராகவும் இருக்கிறார்.

7. பயண நேரம் வருவதற்கு முன்னரே இந்த உலகப் பணிகள் மற்றும் அதன் பொருட்களிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு தனது அன்பனான இறைவன் பக்கம் பயணம் மேற்கொள்பவராக அவர் இருப்பார்.

8. இந்த அற்ப உலகின் செல்வங்களையும் பயன்களையும் விட்டு விட்டு மறுமையின் வீட்டிற்காக தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்பவராக அவர் இருக்கின்றார்.

9. எந்தவொரு நல்ல பணியையும் மறைமுகமான வழியில் செய்வது தான் வாழ்வின் நோக்கமாக இருக்கும்போது இந்த உலகுடன் ஒன்றியிருக்கும் உங்கள் உள்ளத்தை அதிலிருந்தும் விடுவித்துக் கொள்வதுதான் சிறந்தது.

10. அன்பர்களே! எந்த நரகம் தொடர்பாக திருக்குர்ஆன் நம்மிடம் மிகத் தெளிவாக கூறியுள்ளதோ அந்த நரகம் இவ்வுலகின்மீது நாம் வைத்துள்ள பேராசையே ஆகும்.

11. இறுதியில் இவ்வுலகை விட்டு நாம் பிரிந்து பயணம் மேற்கொள்ள வேண்டியது வரும். ஒருநாள் எப்படியும் இங்கிருந்து நாம் செல்ல வேண்டியது வரும்.





12. அவ்வாறு இருக்கும்போது ஒரு அறிவுள்ள மனிதன் உலகிலுள்ள இப்பொருட்கள்மீது ஏன் தனது உள்ளத்தைப் பறிகொடுக்கின்றார்? திடீரென்று அவரது நம்பிக்கையின் மலர்கள் மீது இலையுதிர் காலத்தில் வீசக்கூடிய காற்று வீசி அவற்றை அழித்து விடலாம்.

13. இந்த தீமை நிறைந்த உலகத்துடன் உங்கள் உள்ளத்தை ஒன்றச் செய்வது மிகப்பெரும் தவறாகும். ஏனென்றால், இந்த நிலைதான் இஸ்லாமிய மார்க்கத்திற்கும், உண்மைக்கும், நேர்மைக்கும் துன்பமிழைக்கின்ற கொடிய எதிரியாகும்.

14. இந்த இரு நிறங்கள் கொண்ட உலகத்திலிருந்து உனக்கு என்ன கிடைக்கப்போகின்றது? அது சில நேரங்களில் நட்பின் மூலமாகவும் சில நேரங்களில் சண்டைகள் மூலமாகவும் மனிதனைக் கொன்று விடுகின்றது.

15. நீங்கள் உள்ளத்தால் அந்த உண்மையான எஜமானனுடன் ஏன் உறவை ஏற்படுத்திக் கொள்வதில்லை? அவன்மீதுள்ள அன்புதான் எல்லா துன்பங்களிலிருந்தும் கைதிலிருந்தும் இரட்சிபை வழங்கும்.

16. திசை தடுமாறிச் செல்பவனே! இங்கே வா! உனது நல்ல முடிவைப் பற்றி கவலைப்படு! உனக்கு எனது போதனையை ஏற்றுக் கொள்ள முடியவில்லையென்றால், குறைந்தபட்சம் ஷேக் சஅதி அவர்களின் இந்த அறிவுரையைக் கேள்!

17. உனது முடிவு நல்லதாகவும், நன்மையானதாகவும் இருந்தால் (உனது மரணத்தின்போது) உமக்காக துக்கத்தால் மற்றவர்கள் அழுது புலம்பும் அந்த நொடிகள் நமக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய நொடிகளாக இருக்கும்.

# அல்வஸிய்யத் நூலுடன் தொடர்புடைய முக்கிய இணைப்பு

***அல் வஸிய்யத் நூலுடன் தொடர்புள்ள சில முக்கியமான வெளியீடத் தகுந்தவை கீழே எழுதப்படுகின்றன:***

1. இந்த கபருஸ்தானை நிர்வகிக்கின்ற அஞ்சுமன் அது தொடர்பான எல்லா ஏற்பாடுகளும் தயாராகிவிட்டன என்பதை அறிவிக்காத வரை அல்வஸிய்யத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்று வாழ்ந்து மரணமடைந்த எவரது மையத்தையும் கபருஸ்தானில் அடக்கம் செய்வதற்காக கொண்டு வர வேண்டாம். மாறாக, அதற்கு முன்பு பாலத்தை கட்டி முடித்து தேவையான எல்லா ஏற்பாடுகளையும் நிறைவு செய்வது அவசியமானதாகும். அது வரையில் மையத்தை ஒரு பெட்டியில் அமானத்தாக வைத்து வேறொரு கபருஸ்தானில் தற்காலிகமாக அடக்கம் செய்ய வேண்டும்.
2. அல் வஸிய்யத் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாக உறுதி மொழி கூறும் ஒவ்வொருவரும் உடலளவிலும் மனதளவிலும் ஆரோக்கியமாக இருக்கும் காலகட்டதிலேயே தங்களது உடன்படிக்கையை எழுதி இரண்டு சாட்சிகளின் கையெழுத்துடன் அதனை அஞ்சுமனிடம் ஒப்படைக்க வேண்டும். அவர் தனது அனைத்து அசையும் சொத்துகள், அசையா சொத்துகளில் பத்தில் ஒரு பகுதியை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குறிக்கோள்களைப் பரப்புவதற்காக வஸிய்யத் தாகவோ வக்ஃபாகவோ கொடுப்பதற்காகத் தெளிவாக எழுத வேண்டும். மேலும் அதனை குறைந்த பட்சம் இரு பத்திரிகைளில் வெளியிடவேண்டும்.
3. சட்ட ரீதியாகவும் ஷரீஅத்தின் அடிப்படையிலும் எழுதப்பட்டுள்ள வஸிய்யத் சரியானது என்பதற்கு தங்களது முழு ஒப்புதலை தெரிவிக்கும் வண்ணம் வஸிய்யத் செய்தவருக்கு தங்களது கையெழுத்துடன் முத்திரையும் இடப்பட்ட ஒரு சான்றிதழை வழங்குவது அஞ்சுமனின் கடமையாகும். மேலே குறிப்பிடப்





பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப இந்த கபருஸ்தானுக்கு கொண்டு வரப்படும் மையத்துடன் இந்த சான்றிதழையும் அஞ்சுமனிடம் காட்ட வேண்டும். மேலும் அஞ்சுமனின் வழிகாட்டலுக்கேற்ப அது தேர்வு செய்கின்ற இடத்தில் அதன் மேற்பார்வையில் மையத் அடக்கம் செய்யப்பட வேண்டும்.

4. அஞ்சுமன் ஏற்றுக்கொள்கின்ற குறிப்பிட்ட சூழ்நிலையை தவிர பருவ வயதை அடையாத குழந்தைகள் இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படமாட்டார்கள். ஏனெனில், அவர்கள் சுவர்க்கமே செல்லக்கூடியவர்களாக உள்ளனர். அவ்வாறே இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படும் மையத்தின் உறவினர் எவரும் அல் வஸிய்யத் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றாதவரை இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படமாட்டார்.
5. காதியான் அல்லாத மற்ற இடங்களில் மரணிப்பவர்களது மையத்தை பெட்டியில் வைக்காமல் காதியான் கொண்டு வர அனுமதியில்லை. மேலும் மையத்தை கொண்டு வருவது தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்பே காதியானுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் தற்செயலாக கபருஸ்தானுடன் தொடர்புள்ள சில தற்காலிக தடைகள் ஏற்பட்டிருந்தாலும் அஞ்சுமன் அதனை நீக்கி விட்டு மையத்தை கொண்டுவர அனுமதி வழங்க முடியும்.
6. அல்வஸிய்யத் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா நிபந்தனை களையும் நிறைவேற்றிய ஒரு நபர் பிளேக் நோயால் மரணித்திருந்தால் (இவ்வாறு நடப்பதைவிட்டும் இறைவன் காப்பானாக!) அவர் தொடர்பான முக்கிய கட்டளை என்னவென்றால் இரண்டு வருடங்கள் வரை அந்த மையத்தை பெட்டியில் வைத்து வேறு இடத்தில் அமானத்தாக அடக்கம் செய்ய வேண்டும். இரண்டு வருடங்கள் கழிந்த பிறகு அவர் மரணமடைந்த இடத்திலும் காதியானிலும் பிளேக் பரவாத பொருத்தமான காலகட்டத்தில் அந்த மையத்தை காதியான் கொண்டு வர வேண்டும்.

7. அசையும் சொத்திலிருந்தும் அசையா சொத்திலிருந்தும் ஒருவர் பத்தில் ஒரு பங்கை வழங்குவது மட்டும் போதுமானதன்று. மாறாக, அவ்வாறு வஸிய்யத் செய்பவர் அவரால் இயன்ற வரை இஸ்லாத்தின் கட்டளைக்களுக்கேற்ப வாழ்பவராகவும் இறையச்சத்தின் தூய்மையான வழிகளில் நடக்க எப்போதும் முயற்சி செய்பவராகவும் இறைவன் ஒருவன் என்பதை ஏற்றுக்கொண்டு அவனது தூதர் மீது உண்மையான நம்பிக்கை கொள்ளும் முஸ்லிமாகவும் இருக்க வேண்டும். மேலும் இறையடியார்களின் உரிமைகளைப் பறிக்காதவராகவும் இருக்க வேண்டும்.

8. தனது சொத்தில் பத்தில் ஒரு பங்கை வஸிய்யத் செய்த ஒருவர் திடீரென்று தண்ணீரில் மூழ்கி அகால மரணமடைந்திருந்தால் அல்லது அவரது மையத்தை கொண்டுவர முடியாத அளவில் வெளிநாட்டில் அவர் மரணமடைந்திருந்தால் அவரது வஸிய்யத் நிலைத்திருக்கும். இறைவனது பார்வையில் அவர் இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப்பட்டவரைப் போன்றவராகவே இருப்பார். அவரது நினைவாக இந்த கபருஸ்தானிலேயே ஒரு கல் நடப்பட்டு அதில் அவரை பற்றிய சம்பவங்களை எழுதுவது அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவுக்கல் செங்கற்களாலோ அல்லது கற்களைக் கொண்டோ கட்டப்படலாம்.

9. நிதியை நிர்வகிக்கின்ற அஞ்சுமனுக்கு அதனை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நோக்கங்களுக்காக அல்லாமல் வேறு வகைக்காக செலவு செய்ய உரிமையில்லை. அந்நோக்கங்களில் தலையானது இஸ்லாத்தை பரப்புவதாகும். தங்களது ஒருமித்த கருத்தின் அடிப்படையில் அஞ்சுமன் இந்த நிதியை வியாபாரத்தில் முதலீடு செய்து பெருக்குவதற்கு அனுமதியளிக்கப்படுகிறது.

10. அஞ்சுமனின் எல்லா உறுப்பினர்களும் அஹ்மதிய்யா ஜமாஅத்தை சார்ந்தவர்களாகவே இருக்க வேண்டும். மேலும் நல்லவர்களாகவும் நேர்மையை கடைபிடிப்பவராகவும் இருக்க வேண்டும். எவரைப்பற்றியாவது அவர் நல்லவரல்ல அல்லது





நேர்மையாக நடப்பவரல்ல அல்லது ஏமாற்றும் சூழ்ச்சிக்கார ராகவும் தன்னகத்தே உலகப்பற்று கலந்தவர் என்பது தெரிய வந்தால் எவ்வித தயக்கமுமின்றி அப்படிப்பட்ட நபரை தங்களது குழுவிலிருந்து வெளியேற்றிவிட்டு அவரது இடத்தில் வேறொருவரை நியமிப்பது அஞ்சுமனின் கடமையாகும்.

11. வஸிய்யத் செய்யப்பட்ட செல்வம் தொடர்பாக ஏதாவது வழக்கு தொடரப்பட்டால் அந்த வழக்கை நடத்துவதற்கான செலவு முழுவதும் வஸிய்யத் செய்யப்பட்ட செல்வத்தி லிருந்தே கொடுக்கப்படும்.

12. வஸிய்யத் செய்த ஒரு நபர் தனது பலவீனமான நம்பிக்கையின் காரணமாக தனது வஸிய்யத்தை மறுத்துவிட்டால் அல்லது இந்த இயக்கத்திலிருந்து முகம் திரும்பி சென்றுவிட்டால் சட்ட ரீதியாக அஞ்சுமன் அவரது செல்வத்தை தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தாலும் அந்த செல்வத்தை தனது பிடியில் வைக்க அதற்கு அனுமதியில்லை. மாறாக, அந்த அனைத்து செல்வங் களையும் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், இறைவன் எவரது செல்வத்திற்கும் தேவையுடையவன் அல்லன். மேலும் இறைவனது பார்வையில் அப்படிப்பட்ட செல்வம் வெறுக்கத் தக்கதும் மறுப்பதற்கு தகுதியுடையதுமாகும்.

13. அஞ்சுமன் இறைவனால் நியமிக்கப்பட்ட கலீஃபாவின் பிரதிநிதியாக இருப்பதால் இந்த அஞ்சுமன் உலக நோக்கங்களின் களங்கத்திலிருந்தும் முற்றிலும் தூய்மையாக இருக்க வேண்டும். மேலும் அதன் எல்லா விவகாரங்களும் மிகவும் தெளிவாகவும் நீதியின் அடிப்படையிலும் இருக்க வேண்டும்.

14. இந்த அஞ்சுமனின் வழிகாட்டலின் கீழ் அதற்கு உதவி செய்வதற்காக தூரத்திலுள்ள மற்ற நாடுகளில் கிளை அஞ்சுமன்கள் செயல்பட அனுமதியுண்டு. அப்படிப்பட்ட மற்ற நாடுகளிலிருந்து மையத்தை கொண்டு வருவது கடினமானதாக இருந்தால் அந்த மையத்தை அந்த இடத்திலேயே அடக்கம் செய்யலாம். நற்கூலியிலிருந்து பங்கு பெறும் நோக்கத்துடன் அப்படிப்பட்ட நபர் தனது மரணத்திற்கு முன்னர் தனது

செல்வத்திலிருந்து பத்தில் ஒரு பங்கை வஸிய்யத் செய்திருக்க வேண்டும். வஸிய்யத் செய்யப்பட்ட அந்த செல்வத்தை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவேண்டியது அந்த நாட்டிலுள்ள அஞ்சுமனின் பணியாகும். அதிலிருந்து கிடைக்கும் தொகையை அந்த நாட்டின் மார்க்க தேவைகளுக்காகவே செலவிடுவது சிறந்ததாகும். தேவைப்பட்டால் அந்த தொகையை காதியானை தலைமையகமாக கொண்டுள்ள இந்த அஞ்சுமனுக்கு கொடுக்க அனுமதியுண்டு.

15. இந்த அஞ்சுமனின் தலைமையகமாக எப்போதும் காதியான் இருந்துவர வேண்டும் என்பது அவசியமானதாகும். ஏனென்றால், இறைவன் இந்த இடத்திற்கு அருளை வழங்கியுள்ளான். எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு அஞ்சுமன் இந்த பணிகளை செய்வதற்கென்று ஒரு பொருத்தமான கட்டடத்தை நல்ல முறையில் கட்டுவதற்கு அனுமதியுண்டு.

16. அஞ்சுமனிலுள்ள உறுப்பினர்களில் திருக்குர்ஆனையும் நபிமொழிகளையும் நன்றாக கற்றுணர்ந்த இரு நபர்கள் குறைந்த பட்சம் எப்போதும் இருந்து வர வேண்டும். அவர்கள் அரபி மொழியில் போதுமான அளவு அறிவுள்ளவர்களாகவும் அஹ்மதிய்யா இயக்கத்தின் நூல்களை கற்றுணர்ந்தவர் களாகவும் இருக்கவேண்டும்.

17. அல்வஸிய்யத் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப வஸிய்யத் செய்திருக்கும் ஒரு நபர் தொழு நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், (இறைவன் அவ்வாறில்லாமல் பாதுகாப்பானாக) இந்த கபருஸ்தானுக்கு கொண்டு வரமுடியாத அளவுக்கு அவரது உடலின் நிலை இருந்தால் வெளிப்படையான காரணங்களைக் கருத்தில் கொண்டு அப்படிப்பட்டவரது உடலை இந்த கபருஸ்தானுக்கு கொண்டு வருவது பொருத்தமன்று. ஆனால், அவர் தனது வஸிய்யத்தில் நிலைபெற்றிருந்தால் இந்த கபருஸ்தானில் அடக்கம் செய்யப் படுபவருக்கு கிடைக்கும் அதே தகுதி அவருக்கும் கிடைக்கும்.





18. ஒரு நபருக்கு அசையும் சொத்து, அசையாத சொத்து எதுவும் இல்லாதிருந்தும் அவர் ஒரு நல்ல மனிதர், வறியவர், இறையச்சம் கொண்டவர், தூய நம்பிக்கை கொண்டவர் என்பதும், உலகப்பற்று, நயவஞ்சகம், இறைகட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடப்பதில் தவறிழைப்பது ஆகியவற்றில் எப்பங்கும் அவரிடம் இல்லை என்பதும் நிரூபிக்கப்பட்டால் அவர் எனது அனுமதியுடன் அல்லது எனக்கு பிறகு அஞ்சுமனின் ஒருமித்த கருத்துக்கேற்ப இந்த கபரூஸ்தானில் அடக்கம் செய்யப்படலாம்.

19. இறைவனின் குறிப்பான வஹியின் மூலமாக மறுக்கப்பட்ட நபர் ஒருவர் தான் வஸிய்யத் செய்த செல்வத்தை கொடுத்தாலும் கூட அவர் இந்த கபரூஸ்தானில் அடக்கம் செய்யப்படமாட்டார்.

20. எனக்கும் எனது குடும்பத்திற்கும் இவ்விஷயத்தில் இறைவன் விதிவிலக்கை ஏற்படுத்தியுள்ளான். மற்ற எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பது கண்டிப்பானதாகும். இதை எதிர்த்து முறையீடு செய்பவர் நயவஞ்சகர் ஆவார்.

மேலே எழுதப்பட்டுள்ள இவைதான் அவசியமான நிபந்தனைகளாகும். இனி இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுபவர் இந்த கபரூஸ்தானில் அடக்கம் செய்யப்படுவார். எந்த மனிதர்களிடத்தில் தப்பெண்ணம் மிகைத்திருக்குமோ அப்படிப்பட்ட சிலர் இப்பணியில் நம்மை ஆட்சேபணைக்கு இரையாக்கலாம். இந்த திட்டத்தை சுய நோக்கங்களை அடிப்படையாக கொண்டது என்றும் கருதலாம் அல்லது இதனை பித்அத் (மார்க்கத்தில் புதிதாக புகுத்தப் பட்டவை) என்றும் குறிப்பிடலாம். ஆனால் அல்லாஹ்வின் பணியில் அவன், தான் நாடியதை செய்கின்றான். சந்தேகத்திற்கு இடமின்றி இந்த ஏற்பாட்டின் மூலம் அவன் நயவஞ்சகரையும் நம்பிக்கையாளரையும் வேறுபடுத்திக் காட்ட எண்ணியுள்ளான்.

எவர்கள் இறைவனின் இந்த திட்டத்தை அறிந்து எவ்வித தயக்கமுமின்றி தனது சொத்துகளில் பத்தில் ஒரு பங்கை இறைவழியில் கொடுப்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பார்களோ

அல்லது அதைவிட அதிகமாக கொடுப்பார்களோ அல்லது அதைவிட அதிகமாக கொடுப்பதற்கு தங்களது உணர்வுகளை வெளிப்படுத்துவார்களோ அவர்கள் தங்கள் வலுவான நம்பிக்கை மீது முத்திரை பதித்துவிடுகின்றார்கள் என்பதை நாமே உணர்கின்றோம். அல்லாஹ் கூறுகின்றான்:

الٓمٓ أَحَسِبَ النَّاسُ أَن يُتْرَكُوٓا أَن يَقُولُوٓا آمَنَّا وَهُمْ لَا يُفْتَنُونَ

“நான் அல்லாஹ் எல்லாம் அறிந்தவன். நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவதால் மட்டும் நான் திருப்தியடைந்து விடுவேன் என்றும், இப்போது அவர்கள் சோதிக்கப்பட வேண்டாம் என்றும் மக்கள் எண்ணுகின்றனரா?”(29: 2,3)

இந்த சோதனை ஒன்றுமே இல்லை. சஹாபாக்கள் (ரலியல்லாஹு அன்ஹும்) தங்கள் உயிர்களை அர்ப்பணிக்கின்ற சோதனைக்கு ஆளாக்கப்பட்டனர். அவர்கள் தமது தலையை இறைவழியில் அர்ப்பணித்துவிட்டனர். அவ்வாறிருக்கும்போது இந்த கபருஸ்தானில் எல்லோரும் அடக்கம் செய்யப்பட பொதுவாக ஏன் அனுமதி வழங்கப்படவில்லை என்ற எண்ணம் எந்த அளவு உண்மைக்கு புறம்பானதாக உள்ளது? அவ்வாறு அனுமதிப்பது சரியான செயலாக இருந்தால் அல்லாஹ் ஒவ்வொரு கால கட்டத்திலும் மக்களை ஏன் சோதனையில் ஆழ்த்தினான்? அவன் ஒவ்வொரு காலகட்டத்திலும் நல்வர்களை தீயவர்களிட மிருந்து வேறுபடுத்திக் காட்ட விரும்பி வந்திருக்கிறான். எனவே, இப்போதும் அவன் அவ்வாறே செய்துள்ளான்.

இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் சிறு சிறு சோதனைகளையும் வைத்திருந்தான்.

உதாரணமாக, எந்த ஒரு நபரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எந்த ஒரு விஷயம் தொடர்பாகவும் ஆலோசனை பெறுவதற்கு முன்னர் ஏதாவது காணிக்கையை அன்பளிப்பாக அவர்களுக்கு கொடுப்பது வழக்கத்தில் இருந்தது. எனவே இதிலும் நயவஞ்சகர்களுக்கு சோதனை இருந்தது.





இக்காலகட்டத்தில் உள்ள சோதனையிலும் உண்மையிலேயே உளப்பூர்வமாக உலகத்தைவிட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ள உயர்வான தகுதியை பெற்றுள்ள தூயவர்கள் மற்ற மக்களிடமிருந்து பிரித்தறியப்படுவார்கள் என நாம் உணர்கின்றோம். அவர்கள் தமது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றிக்காட்டி விட்டார்கள் என்பதும் தங்களது உண்மையை வெளிப்படுத்திக் காட்டி விட்டனர் என்பதும் நிரூபணமாகி விடும். சந்தேகத்திற் கிடமின்றி இந்த ஏற்பாடு நயவஞ்சகர்களுக்கு மிகக் கசப்பானதாக இருக்கும். மேலும் இதன் மூலம் அவர்களது திரை அகற்றப்படும். அவர்கள் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் மரணத்திற்கு பிறகு இந்த கபருஸ்தானில் ஒருபோதும் அடக்கம் செய்யப்படமாட்டார்கள். அவர்களின் உள்ளங்களில் நோய் ஒன்று இருந்தது. فِي قُلُوبِهِم مَّرَضٌ فَزَادَهُمُ اللَّهُ مَرَضًا அல்லாஹ் அவர்களின் நோயை மேலும் அதிகப்படுத்தி விட்டான் (2:11)

ஆனால், இந்த பணியில் முன்னேறிச் செல்பவர்கள் உண்மையாளர்களை சார்ந்தவர்களாக கருதப்படுவார்கள். எப்போதும் இறைவனின் அருள்கள் இவர்கள் மீது இருக்கும்.

துன்பங்களின் நாட்கள் மிக அருகில் இருக்கின்றன. பூமியை மேலும் கீழுமாக ஆக்கக்கூடிய ஒரு கடுமையான பூகம்பம் அருகில் இருக்கின்றது என்பதையும் கடைசியாக நினைவிற் கொள்ளுங்கள். தண்டனையை காண்பதற்கு முன்னரே எவர்கள் உலகப்பற்றிலிருந்து விலகிவிடுவார்களோ, எனது கட்டளையை முழுமையாக நிறைவேற்றியவர்களாக நிரூபித்துக் காட்டுவார்களோ அவர்களே இறைவன் பார்வையில் உண்மையான நம்பிக்கையாளர் களாக இருப்பார்கள். மேலும் அவர்களே அவனிடத்தில் முதலில் முன்னேறிச் சென்றவர்களாக எழுதப்படுவார்கள். இந்த கட்டளையை புறக்கணிக்கின்ற உலகத்தின் மீது பற்று வைத்துள்ள ஒரு நயவஞ்சகன் தண்டனையை காணும் சமயத்தில் அந்தோ! நான் இந்த அசைகின்ற அசையாத எல்லா சொத்துகளையும் இறைவழியில் தந்து விட்டு இந்த தண்டனையிலிருந்து தப்பித்திருக்கலாமே என்று அழுதவாறு

கூறும் அந்தக் காலம் அருகில் உள்ளது என்பதை நான் உண்மையாகவே உங்களுக்கு கூறிக்கொள்கின்றேன். இந்தத் தண்டனையைக் கண்ட பிறகு நம்பிக்கை கொள்வது பயனற்றது என்பதையும் தான தருமங்கள் செய்வது வீணானது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

பாருங்கள்! நான் மிக அருகிலுள்ள ஒரு தண்டனையை குறித்த செய்தியை உங்களுக்கு தெரிவிக்கிறேன். உங்களது நீண்ட பயணத்திற்காகத் தேவைப்படும் அனைத்தையும் உங்களுக்காக உடடினயாக ஒன்று திரட்டுங்கள். அது உங்களுக்கு பயனளிக்கும். உங்களது செல்வத்தை உங்களிடமிருந்து வாங்கி அதனை எனது பிடியில் வைத்திருக்க வேண்டும் என நான் விரும்பவில்லை. மாறாக, மார்க்கத்தைப் பரப்புவதற்காக நீங்கள் உங்கள் செல்வத்தை ஒரு அஞ்சுமனிடம் ஒப்படைத்து விட்டால் சுவர்க்க வாழ்க்கையைப் பெற்றுக் கெள்வீர்கள். பலரும் உலகத்தின் மீது பற்று வைத்து எனது இந்த கட்டளையை செயல்படுத்தாமல் ஒத்திப் போட்டு விடுவார்கள். ஆனால் அவர்கள் விரைவில் உலகை விட்டுப் பிரிக்கப்படுவார்கள். அந்த இறுதி நொடிகளில் இவ்வாறு கூறுவார்கள்.

هذا ما وعد الرحمن وصدق المرسلون

இது அளவற்ற அருளாளனின் வாக்குறுதியாகும். தூதர்கள் உண்மையே கூறினர். (36:52)

والسّلام على من اتبع الهدى

நேர்வழியை பின்பற்றுபவர் மீது இறைவனின் சாந்தி நிலவட்டும்.

*(அல்ஹகம் பத்திரிகை பாகம் 10 நம்பர் 2 17, ஜனவரி 1906)*

இந்த எளியவன்

***மிர்ஸா குலாம் அஹ்மத்***

இறைவனிடமிருந்து அனுப்பப்பட்டுள்ள
வாக்களிக்கப்பட்ட மஸீஹ்
**ஜனவரி 6, 1906**





بسم الله الرحمن الرحيم

الحمد لله ربّ العالمين والصّلوة والسّلام على رسوله محمد
وآله وأصحابه أجمعين

*1906 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் தேதியில் நடைபெற்ற காதியான் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா செயலர்களின் முதலாவது கூட்டத்தின் நிகழ்வுகள்:*

**கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்:**

**ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப்** - *தலைவர்.*

**கான் சாஹிப் முஹம்மது அலி கான் சாஹிப்.**

**சாஹிப் ஸாதா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் சாஹிப்.**

**மவ்லவி செய்யது முஹம்மது அஹ்ஸன் சாஹிப்.**

**காஜா கமாலுத்தீன் சாஹிப்.**

**டாக்டர். செய்யது முஹம்மது ஹுஸைன் சாஹிப்** - *செயலாளர்*

*சில முக்கிய வழிகாட்டல்களைத் தெரிவிப்பதும், ஒப்புதல் வழங்குவதும் மிகவும் அவசியமாக இருந்ததாலும் அருகிலும் தொலைவிலும் உள்ள சகோதரர்களுக்கு இதுபற்றிய தகவலை தெரிவிக்கப்போதுமான நேரம் இல்லாததாலும் ஹஸ்ரத் இமாம் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அனுமதியுடன், விதிமுறைகளுக்கான ஒப்புதலைப் பெற்ற பிறகு இக்கூட்டம் நடைபெற்றது.*

**கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :**

1. *வஸிய்யத்தின் வாசகம் அடங்கிய அச்சடிக்கப்பட்ட தாள் வெளியிட ஒப்புதல் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.*
2. *உடனடியாக வஸிய்யத்தின் வாசகம் அடங்கிய 800 நகல்கள் அச்சடித்து வெளியிடப்பட வேண்டும். மேலும், அல்ஹக்கம் மற்றும் பத்ர் பத்திரிகைகளிலும் அதனை அச்சிட்டு வெளியிட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.*

3. வஸிய்யத் செய்பவர்களுக்கு கீழ்க்காணும் வழிகாட்டல்களை அவர் அதனை நிறைவேற்றுவதற்காக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அந்த வழிகாட்டல்கள் வஸிய்யத் படிவத்தின் கீழே அச்சிட்டு வெளியிடப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அ) தேவைப்பட்டால் வஸிய்யத் செய்தவர்கள் வஸிய்யத் வாசகம் அச்சடிக்கப்பட்ட படிவத்தைக் கேட்டுப் பெறலாம். அதன் நகலை சாதாரணத் தாளில் முழுமையாக எழுத வேண்டும். மேலும், எங்கெல்லாம் இடம் விடப்பட்டுள்ளதோ அங்கு அவரவரது நிலைமைகளுக்கேற்ப அவரே காலியிடங்களை எழுதி நிரப்ப வேண்டும். வஸிய்யத் வாசகம் எழுதப்படும் தாள் உறுதியானதாக இருக்க வேண்டும்.

ஆ) இயன்றவரை வஸிய்யத்தை பதிவு செய்து (REGISTRATION) விட வேண்டும். மேலும் முடிந்தவரை வஸிய்யத் எழுதப்பட்ட தாளில் சாட்சிகளாக வஸிய்யத் செய்தவரின் வாரிசுகள் அல்லது வஸிய்யத்தில் அவருடன் பங்கு பெறுபவர்கள் கையெழுத்திட வேண்டும். அத்துடன் நகரம் அல்லது கிராமத்தைச் சார்ந்த இரண்டு கண்ணியத்திற்குரிய நபர்களின் சாட்சியும் இருக்க வேண்டும்.

இ) வஸிய்யத் செய்தவரும், சாட்சிகளும் அவர்கள் படித்தவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் தங்களது கையெழுத்துடன் கைப் பெரு விரல் அடையாளமும் கண்டிப்பாக இட வேண்டும். மேலும் படித்தவர்கள் கையெழுத்தும் போட வேண்டும். ஆண்கள் இடக்கை பெருவிரலைக் கொண்டும், பெண்கள் வலக்கை பெரு விரலைக் கொண்டும் ரேகை பதிவு செய்ய வேண்டும்.

ஈ) வஸிய்யத் செய்கின்றவர் எழுதத் தெரிந்தவர் என்றால் அவர் தனது வஸிய்யத்தை தனது கைகளால் எழுத வேண்டும்.

உ) வஸிய்யத்தில் தபால் தலை ஒட்ட வேண்டியதில்லை.

ஊ) வஸிய்யத் செய்தவர் தனது குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையின் காரணமாக அதற்காக சட்ட ஆலோசனைப் பெற வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டால் அஞ்சுமன் சட்ட ஆலோசகராக இருப்பவருக்கு கடிதம் எழுதி அதைப் பற்றி கேட்டுக் கொள்ளவும்.





4. பஞ்சாபில் நிலங்களுக்கு சொந்தக்காரர்களாக இருப்பவர்களுக்கு அவர்களுக்கு வஸிய்யத் செய்வதில் ஏதாவது சிக்கல்கள் இருந்தால் எந்த அளவு சொத்துகளை அவர்கள் வஸிய்யத் செய்ய விரும்பு கிறார்களோ அவற்றை வஸிய்யத் செய்வதற்குப் பகரமாக தங்களது வாழ்நாளிலேயே அதனை நன்கொடையாக வழங்கி விடுவது பொருத்தமானதாகும். மேலும், அந்த நன்கொடைப் பத்திரத்தில் தனது வாரிசுகள் இதற்கான ஒப்புதலைத் தெரிவிக்கும் வகையில் அந்த வாரிசுக(ள் எவராவது இருந்தால்)களின் கையெழுத்தையும் பெற வேண்டும். அந்த நன்கொடைப் பத்திரம் பதிவு செய்யப்படுவது அவசியமாகும். நன்கொடையாக வழங்கப்பட்ட சொத்தை பயன்படுத்தவும் விற்கவும் உள்ள எல்லா உரிமையும் காதியான், சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பெயரில் எழுதப்பட வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவருக்குப் புதிதாக வரும் சொத்துக்கள் தொடர்பாக மேற்கூறப்பட்டவாறே ஒவ்வொரு சமயத்திலும் செய்ய வேண்டும்.

5. மேலே குறிப்பிட்ட நான்காவது தீர்மானத்தை செயல்படுத்து வதிலும் தனது சொத்தை நன்கொடையாக வழங்குபவருக்கு சிக்கல் இருந்தால் எந்த அளவு சொத்துக்களை அவர் வஸிய்யத் செய்ய அல்லது நன்கொடையாக வழங்க அவர் விரும்புகிறாரோ அதற்கு சந்தையில் தற்போதுள்ள விற்பனை விலையை நிர்ணயித்தோ அவற்றை விற்றோ நிர்ணயிக்கப்பட்ட தொகையை அல்லது சொத்தை விற்றுப் பெற்றத் தொகையை இந்த கபருஸ்தானை நிர்வகிக்கின்ற குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட நிலையில் அவர் புதிதாக உருவாக்கும் சொத்துக்கள் தொடர்பாகவும் மேற்கூறப்பட்டவாறே ஒவ்வொரு சமயத்திலும் செய்ய வேண்டும்.

6. எவர்களுக்கு எவ்வித சொத்தும் இல்லையோ, ஆயினும் வருமானத்திற்கான வழி இருக்கின்றதோ அவர்கள் தமது வருமானத்தில் குறைந்தபட்சம் பத்தில் ஒரு பங்கை மாதாமாதம் அஞ்சுமனிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் இந்த இயக்கத்தின் உதவிக்காக கொடுக்கின்ற சந்தா தொகையை இந்த பத்தில் ஒரு பங்காக அவர்கள் வழங்கும் தொகையில் சேர்க்கவோ அல்லது அதனை தனியாக கொடுக்கவோ அவர்களுக்கு உரிமை உண்டு. தற்போது அவர் வழங்கிவரும் சந்தாவை இந்த பத்தில் ஒரு

பங்காக அவர் வழங்கும் தொகையில் சேர்க்க விரும்பினால் அவர் சந்தா அனுப்புவதுபோன்று அனுப்பிக்கொண்டிருக்கட்டும். ஆனால், அவரது சந்தா தொகையை கழித்த பிறகு எஞ்சியுள்ள தொகையை இந்தக் கபருஸ்தானை நிறுவகிக்கின்ற குழுவிலுள்ள பொருளாளரின் பெயரில் அனுப்பி வைக்க வேண்டும். மற்ற கடிதத் தொடர்புகளை இக்குழுவிலுள்ள செயலருடன் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், அவரது மரணத்திற்குப் பிறகு அவர் விட்டுச் செல்பவற்றில் பத்தில் ஒரு பங்கின் எஜமானனாக அஞ்சுமன் இருக்குமென அவர் வஸிய்யத் செய்ய வேண்டும்.

**குறிப்பு :**

*i)* ஒருவர் வஸிய்யத் தொடர்பாகவோ அல்லது நன்கொடையாக வழங்குதல் தொடர்பாகவோ சட்ட ரீதியாக மேலும் விபரங்களை அறிய விரும்பினால் அவர் தனது வஸிய்யத் அல்லது நன்கொடையாக வழங்குதல் தொடர்பாக எழுதுவதற்கு முன்பு இந்தக் கபருஸ்தானை நிறுவகிக்கின்ற குழுவிற்கு கடிதம் எழுதலாம்.

*ii)* குறிப்பிட்ட சூழ்நிலையில் செயற்குழுவிடம் கடிதம் மூலம் சில விஷயங்கள் தீர்மானிக்கப்படலாம்.

7. கபருஸ்தான் தொடர்பாக செலுத்தப்படும் சந்தாவோ அல்லது அல் வஸிய்யத்திலுள்ள இந்தப் பிரசுரத்தில் ஏற்கனவே குறிப்பிடப் பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ப அனுப்பப்படும் தொகையோ அவை அனைத்தும் கீழ்க்காணும் முகவரிக்கு மட்டும்தான் அனுப்பப்பட வேண்டும். வேறு யாருடைய பெயரிலோ அல்லது வேறெந்த முகவரியிலோ அனுப்பக் கூடாது.

FINANCIAL SECRETARY

MAJLIS KAR PARDAZ MASALIHE KABURUSTHAN

இப்படிக்கு,<br>
முஹம்மது அலி - செயலர்<br>
ஜனவரி 29, 1906<br>
நூருத்தீன் ஜுலை 1, 1906<br>
**மிர்ஸா குலாம் அஹ்மத்**